? CAUG 1931

நவமணி.

எல்லாம் தேவன் செயல்

உள்நாடு ரூ 1

வெளிநாடு ரூ 1½

ஆசிரியன் சி. ரா. ம இராமநாதன்

NAVAMANI.

(A High Class Tamil monthly)

PALLATUR, RAMNAD Dt. S. INDIA.

Vol. 2. பிரஜோற்பத்தி-௵ ஆடி-மீ No 7.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள் வணக்கம்.	241
2.	அறிவிப்பு.	242
3.	பெண்ணுயர்வு:— பத்திராதிபர்.	243
4.	மணியொளி:— பத்திராதிபர்.	246
5.	அதிசயக்கொத்து:— சி. கு. நா.	249
6.	நாற்றிசை நடப்பு.	250
7.	மதிப்புரை.	252
8.	பைந்தமிழுக்குத் தொண்டுபுரிந்த பன்னிருசெல்வர்கள்:— பாற்கடலோன்.	253
9.	சில அமுத மொழிகள். (கபீரடிகள்)	256
10.	நமது முன்னோர்கள் எழுதிய ராஜநீதி நூல்கள்:— கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள்.	258
11.	சோழநாட்டு மலைமேற் கோயில் கற்குடி:— பழநி திரு நா. நடராஜமுதலியாரவர்கள்.	262
12.	நற்குணம்:— பெருந்துறை ஜவுளி அ. மீனாட்சிசுந்தர முதலியாரவர்கள்.	265
13.	அவளது இறுதி உபாயம்:— திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.	268
14.	கம்பராமாயணக் கதிர்மணிக்கோவை:— நாரணன் நவில்வது.	272
15.	சத்திமுற்றப் புலவர்:— கோவை கிழான்.	274
16.	கனகவல்லி அல்லது கள்வர்கவர்ந்த கன்னிகை:— கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.	277

சந்தாதாருக்கு அறிவிப்பு.

வெளிநாட்டில் புதிதாய்ச் சந்தா செலுத்திய யாவருக்கும் பத்திரிகையை அனுப்புகிறோம். எனினும் எவருக்கேனும் பத்திரிகை கிடைக்காமலிருந்தால் அவர்கள் சந்தா செலுத்திப் பெற்றுள்ள நம்பரைக் குறித்துச் சரியான விலாசந் தெரிவித்தால் உடனே பத்திரிகை அனுப்பப்படும். சிலர் ரூபாயைமட்டும் அனுப்பி விலாசம் அறிவிக்காமலிருக்கின்றனர். யாவரும் ரூபாய் அனுப்பும் பொழுதே சரியான விலாசத்துடன் கடிதமொன்றும் எழுதவேண்டுகிறோம்.

7 0 AUG 1981

கடவுள் வணக்கம்.

தனத்த தத்தத் தனத்தன
தனத்த தத்தத் தனத்தன
தனத்த தத்தத் தனத்தன தந்ததானதனன

தெருப்பு றத்துத் துவக்கியாய்
முலைக்கு வட்டைக் குலுக்கியாய்ச்
சிரித்து ருக்கியே பண்டைகூளமெனவாழ்

சிறுக்கி ரட்சைக் கிதக்கியாய்
மனத்தை வைத்துக் கனத்தபேர்
தியக்க முற்றுத் தவிக்கவே கண்டுபேசியுடனே

இருப்ப கத்துத் தளத்துமேல்
விளக்கெ டுத்துப் படுத்துமேல்
இருத்தி வைத்துப் பசப்பியே கொண்டுகாசுதணியா

திதுக்க துக்குக் கடப்படா
மெனக்கை கக்கக் கழற்றியே
இளைக்க விட்டுத் துரத்துவார் தங்கள்சேர்வைதவிராய்

பொருப்பை ஒக்கப் பணைத்ததோர்
இரட்டி பத்துப் புயத்தினே
பொறுத்த பத்துச்சிரத்தினே மண்டுகோபமுடனே

பொரப்பொ ருப்பிற் கதித்தபோர்
அரக்கர் பட்டுப் பதைக்கவே
புடைத்து முட்டத் துணித்தமால் அன்புகூறுமருகா

வரப்பை எட்டிக் குதித்துமேல்
இடத்தில் வட்டத் தளத்திலே
மதர்த்த முத்தைக் குவட்டியே நின்றுசேலினம்வாழ்

வயற்பு றத்துப் புவிக்குள்நீள்
திருத்த ணிக்குட் சிறப்பில்வாழ்
வயத்த நித்தத் துவத்தனே செந்தில்மேவுகுகனே.

அறிவிப்பு.

நமது "நவமணி" ஆசிரியர் சி. ராம. இராமநாதன் அவர்கள் இம்மாத முதல் தேதி முதல் நவமணிப் பத்திரிகைக்குச் சந்தாதாரரை மிகுதியாகச் சேர்க்கவும்; விளம்பரங்களைச் சேகரிக்கவும்; ஏனைய வழிகளில் நவமணியின் முன்னேற்றங்கருதித் தமிழன்பர் பலரையுங் கண்டு சம்பாஷிக்கவும்; தமிழ்நாடெங்கணும் சுற்றுப்பிரயாணஞ் செய்யும் எண்ணத்தோடு இப்பொழுது செட்டிமார் நாட்டின் மேலைவட்டகைப் பகுதிகளில் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு அன்பர்கள் எல்லாவித நல்லுதவிகளையும் அன்புகூர்ந்தளித்து நவமணியின் பெருக்கத்திற்குப் பேருபகாரிகளாகவிருந்து நன்மை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பள்ளத்தூர்
16-8-31.

மானேஜர்
நவமணிப் பத்திரிகாலயம்.

உ

எல்லாம் தெய்வச்செயல்.

‘நவமணி’

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. பாரதியார்.
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. திருவள்ளுவர்.

மாலை 2. } பள்ளத்தூர், பிரஜோற்பத்தி, ஆடி { மணி 7.

பெண்ணுயர்வு.

இத்தமிழகத்தார் பெண்களைத் தங்கள் அடிமைகளென மதித்து உலகியல் ஒன்றையுமே பெண்ணுலகம் அறியாதவாறு அடக்கிவைத்துள்ளனர். ஆண்கள் தனித்துக்கூடும் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் பெண்ணுயர்வு வேண்டும் எனப் பேசுவதும் தீர்மானங்கள் செய்வதும் கட்டாயமாக நிகழ்ந்துகொண்டே வருகின்றன. அதேபோன்று பெண்கள் மஹாநாட்டிலும் தங்கள் உயர்வு கோரித் தீர்மானங்கள் செய்யப்படுகின்றன. உண்மையில் வெளிநாடுகளையும் இந்திய நாட்டையும் நோக்கும் பொழுது வெளிநாட்டிற்கு இந்தியப் பெண்ணுலகம் மிகப் பின்னடைந்துள்ளது. அதிலும் தமிழ்ப்பெண்ணுலகம் மிகச் சீர்கேடுற்றுளது. கல்வி போதிய அளவு பெண்களுக்கு ஊட்டப் பெற்று வெளி உலகத்தை அறிய ஏதுவான சமாசாரப் பத்திரிகை படிக்குமளவேனும் பெண்களுக்குப் போதிய பயிற்சி அளித்திருப்போமேயானால், இந்திய சுதந்தரப்போரில் வங்கம், பம்பாய், குஜராத், ஆந்திர நாடுகளின் பெண்கள் செய்த தியாகத்தைவிட அளப்

பரிய பெருந்தியாகத்தை இத் தமிழகப் பெண்கள் செய்திருப்பர். நமது சுதந்தரப்போரில் ஏனைய மாகாணப் பெண்களைவிடத் தமிழகப் பெண்கள் பின்னடைந்தது பெண்ணுலகின் குறைவா லல்ல. ஆண்கள் பெண்ணுலகிற்குச் செய்யவேண்டிய கடமையை செய்யத் தவறியதனலேயே எனத் தாராளமாகச் சொல்லாம்.

ஆண்சமூகம் பெண்களை அடிமையாக்கி அவர்கள் சுதந்தரம் யாவையும் பறித்துவாழும் வாழ்க்கை பெரிதும் வெறுக்கத் தகுந்தது. அதற்கு ஆணுலகு பெண்களுக்கு ஒரு தாழ்ந்த பெயரையும் கட்டிவிட்டிருக்கிறது. 'பெண் புத்தி பின் புத்தி' என்றும், 'பேதமை என்பது மாதர்க் கணிகலம்' என்றும் இதுபோன்று இன்னும் பலவாறுகச்சரியாகவோ, தப்பாகவோ தமிழகத்தார் வழங்கிய பழமொழிகளை அவர்கள் மாட்டுச்சாஸ்வதமாக்கி இதை ஓர் வியாஜமாகவைத்துக்கொண்டு அவர்களை அடிமையாக்கி வைத்திருப்பது சிறிதும் பொருத்தமற்ற தொன்றாகும். என்று நமது சுதந்தரம் கோரப்படுகிறதோ அன்றே நாம் பிறரை அடிமையாக்குதலையும் விட்டொழிப்பதே கடமையாகக் கொள்ளவேண்டும். பெண்கள் யாவரும் பின்புத்திக்காரர்கள் என்பதையும் பெண் சமூகத்திற்கே பேதமை அணிகலம் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. பெண்களிலே பேதமையற்ற நல்லாருமுள்ளனர். புத்தி கூர்மையுள்ளவருமுள்ளனர். அதே போன்று ஆண்களிலே பின் புத்திக்காரர்களுமுள்ளனர். பேதமை படைத்தவர்களுமுள்ளனர். இக்குணங்கள் ஒரு சமூகத்திற்கே உரித்தானதென்பது நீதியா? அவ்வாறே தான் உள்ளதா என்பதைச் சமரசக்கண்ணல் பார்த்தால் அதுஒப்பமுடியாத விஷயமாகத்தோன்றும். ஆண்கள் பிறந்ததும் அனுபவிக்கவுள்ள உரிமைகள் யாவையும் பெண்களுக்கும் கட்டாயமாகக் கொடுத்துவிடுவது என்ற நியதி இருசமூகத்தவர் பாலும் ஒப்புக்கொண்டு இருசமூகமும் ஒரே நோக்குடன் முன்னேறினல்தான் உலகியல் செம்மையாக நடைபெற முடியுமே தவிர ஒரு சமூகம் மடமை நிறைந்தது என ஒதுக்கிவைத்து ஒரு சமூகத்தவர் மாத்திரம் முன்னேறுவதால் போதிய பலன் விரும்பியவாறு கிட்டாது. பெண்ணுயர்வு தேட ஆண்கள் முற்படுவதால் ஆண் சமூகம் நெறிகெட்டுத் தாழ்ந்தநிலையை அடைந்துவிடுமென்ற பயமும் யாரும் கொள்ளவேண்டா. பிறப்புமுதலே ஆண்கள்

அநுபவிப்பது போன்று, கல்வி, தொழில், குடும்பவாழ்வு, சொத்து பாத்தியதை உலகியல் விவகாரம் முதலிய யாவற்றிலும் ஆண் சமூகம் பெண்மக்கட்குச் சரியான உயர்வைக்கொடுத்துத் தம்மைப்போலவே சரிசமானமாக நடாத்திவருமேயானால், பெண்களை நடாத்துவதில் இன்று ஆண்கள் படவேண்டிய கஷ்டங்கள் குறையும். ஆண்களின் உயர்வுக்கும் அவர்களின், திடவாழ்க்கைக்கும், நுண்ணிய அறிவு வளர்ச்சிக்கும் பெண்கள் பெரும் பேறுதவியாளர்களாக விளங்குவார்கள். ஆண்கள் படுங் கஷ்டவிஷயங்களிலும் வீரச்செயல்களிலும் பெண்களும் பங்குகொள்வார்கள். உலகிலே பெண் விபசாரம் அதிகமாக நடைபெறுவதற்குங்கூட ஆண் சமூகத்தினர் பெருங் காமிகளாக விளங்குவது, சாதுப் பெண் சமூகம் போதிய பலமுள்ள-விவாதபுத்தியுள்ள-தற்காப்புச் சுதந்தரமற்ற நிலைமையில் வாழ்வதாலுமேயாம். இவ்வகையில் பெண்கள் திடசரீரிகளாயும், சுகாதாரமுறைகளையும் விபசாரத் தீங்குகளையும் நன்கறியக்கூடியவர்களாயும், ஆண்களின் சூழ்ச்சிகளைக் கண்டு மயங்காத அறிவுபடைத்தவர்களாகவுமிருப்பார்களேயானால், இன்றுள்ள அளவு விபசாரம் நடைபெறமாட்டாதெனத் துணிந்து கூறலாம். விபசார உலகு மேற்கண்ட குறைகளாலேயே விர்த்தியாகிறது. அல்லாமல் நியாயமானவழியில் எல்லா உரிமைகளையும் அழித்து அவர்களுக்கு நல்லமுறையில் கல்வி கற்பிப்போமேயானால் அவ்வுலகம் அழிந்துவிடும். விபசாரம் பூருவாகத் தடைப்படும் ஒருநாடு சூழ்ச்சிகள் அற்றநாடாய், டாம்பீகச் செலவுகள் குறைந்தநாடாய் நல்லோர்மலிந்த நாடாய்த் திகழும் என்பது திண்ணம். உயர்ந்த நடையுடைய பாவனைகளமைந்த மாதர்பால் தோன்றும் மக்களும் வீரர்களாய் நல்ல அறிவாளிகளாகவுமே விளங்குவார்கள். இதை இன்று பெண்ணுயர்வு கொடுத்துப் பெருமை பெற்றுள்ள வெளிநாடுகளை நோக்குவார் நன்கறிவர். அதல்லாது பெண்களாகத் தனியாக நடத்தப்படும் கூட்டங்களில் பேசும் சில பெண்களின் மட்டில்லாக் கடோவார்த்தைகளுக்கும் ஆண்களை அடிமையாக்க வேண்டுமென்ற குரோத எண்ணத்திற்குக் காரணமும் அவர்களுக்குச் சரியான முறையில் கல்விப்பயிற்சி இல்லாததேஎன்பதை அறிஞர்யாவரும் தெற்றென அறிவர். காலப்போக்கின் சூழ்ச்சியில் இனி உயர்வுதாழ்வு கற்பித்து வாழ இடமில்லை. உலக முற்போக்கின் நிலையறிந்து நாம் பெண்ணுயர்வு பேணி ஆண்களோடு சமானமாய் அவர்களையும் ஆக்க வேண்டிய முயற்சியை எவ்வெவ்வகையில் கையாளவேண்டுமோ அவ்வவ்வகையில் உடனே கையாள முயற்சிக்கவேண்டுகிறோம்.

மணியொளி.

புதுக்கோட்டைக் கலவரம்.

இம்மாத முதலில் புதுக்கோட்டையில் குடிகளுக்கும் அரசாங்க வர்க்கத்தினருக்கும் இடையிலேற்பட்ட சிறுதகராறு பெருங்கலவரத்தில் கொலையுங் கொள்ளையுமாய்முடிந்தது யாவரும் அறிந்ததே. அரசியல் நிர்வாகப் பொறுப்பேற்று நடாத்தும் அதிகாரிகள், மிகச்சாதுவான புதுக்கோட்டை மக்களைச் சமரஸமாயும், அவர்கள் குறைகளைக் கவனித்து அதற்கேற்ற பரிகாரமுந் தேடி ஜனப்பிரீதியாகச் செயலாற்றி வந்திருப்பின், குறைந்த ஜனத்தொகையுடைய புதுக்கோட்டையில் கலகநிகழ்ச்சிக்குக் காரணமேயில்லாமற் போயிருக்கும். அந்நிலைதவறி சாதுவான மக்களைப் படிப்படியாக வரி உயர்வின் மூலம் கஷ்டத்திற் குள்ளாக்கியது மன்றி தங்கள் செலவைப் பெருக்கிக்கொண்டு அதற்கெனப் புதியவரி விதித்து வசூலிக்கவும் எண்ணினர். சிறிது காலமாகப் பொருளாதாரத்தில் சுணக்கமேற்பட்டு வருவாய் குறைந்து உள்ள வரியை கட்டுவதற்குத் தவிக்குமிந்நாளில் புதுவரியைச் செலுத்தவ தெங்ஙனமென மனமேங்கிய குடிகள் உள்ளங்கொதித்துச் சினமெய்தினர். அதனால் பெருங் குழப்பம்நேர்ந்து புதுக்கோட்டை அரசியல் இயந்திரத்தை இரண்டு நாள் ஸ்தம்பிக்கச்செய்துவிட்டது. அத்துடன் அரசாங்கத்திற்கும் பெருத்த நஷ்டத்தையும் உண்டாக்கிற்று. புதுக்கோட்டை ராஜ்யத்தில் தேசிய இயக்கம் பரவி உலகம் போற்றும் உத்தமராகிய மஹாத்மாவின் இதோபதேச இன்மொழிகள் அந்தராஜ்யத்து மக்கள் மனதில் நன்கு பதிந்திருக்குமேயாயின், இவ்வடாச்செய்கையும், பலாத்காரக் குற்றங்களும் ஒருபோதும் நிகழ்ந்திருக்கவேமாட்டா. அடக்கமும், அமைதியும் மக்கள் உள்ளத்தில் நிலைபெறச்செய்வதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும். அதற்கு மாறாக அதிகாரிகள் நடப்பார்களாயின், மக்கள் உள்ளத்தில் மாறுபாடான எண்ணங்கள் தோன்றிக் குழப்பத்திற்கேதுவான காரியங்களே நிகழும். குடிகள்

உள்ளத்தில் அத்தகைய உணர்ச்சியேற்படாமல் அதிகாரிகள் கவனித்து நன்மைபுரிவதையே கடமையெனக் கொள்ளவேண்டும்.

புதுக்கோட்டைக் குடிமக்கள் தாங்கொணு வறுமைக்குள்ளாகி வெறிபிடித்துச் செய்த சில அடாத செய்கைகட்கு அதிகாரிகள் அவர்கள் மீது முனிவுகொள்ளாது பேதைமைச் செயலெனப் புறத்தொதுக்கிப் பெரியமனது படைத்து யாவர்கட்கும் பொது மன்னிப்பளிப்பதுடன் கூடுமானவரை வரி உயர்வைக் குறைப்பதாகக் கூறியவாக்குறுதியையும் நிறைவேற்றுவது தான் இக்கால சந்தர்ப்பத்திற்கேற்ற நீதியாகும். அதிகாரிகள் கவனிப்பார்களென்றே நம்புகிறோம்,

பெண் போலீஸ்.

பெண்கள் நிர்வாகத்திற் கெனத் தனியாகப் பெண் போலீஸ் நிறுவப்படவேண்டுவது இன்றியமையாத ஓர் திட்டமாகும். இதை வற்புறுத்திச் சமீபத்தில் சென்னை மாதர் சங்கத்தார் செய்த தீர்மானமும் போற்றுதற் குரியதாகும். அமெரிக்கா இங்கிலாந்து முதலிய இடங்களிலுள்ளதுபோல் இந்தியாவிலும் தனியாகப் பெண்கள் போலீஸ் இருக்குமானல் பல மாதர் முன்னேற்றங்களைப் பாதுகாக்கவும், அவர்களிடையே நிகழும் குற்றங்களைக் களையவும் பெண் குற்றவாளிகளை அடைப்பதற்கெனச் சில இடங்களிலும் குறிப்பாக வேலூர் முதலிய இடங்களில் பெண்களுக் கெனத் தனியாக ஜெயில்களிருப்பதுபோல் பெண்களைக் காக்கத் தனியான பெண் போலீஸும் இருக்குமானல், ஆண் பாதுகாப்பாளர்களால் பெண்களுக்கு நாளடைவில் பல இடங்களிலும் குறிப்பாகச் சத்தியாக்கிரஹ இயக்ககாலத்தில் சில இடங்களிலும் நடந்த அடாத செய்கைகள் நடைபெற இடமேயில்லாது போய் விடும். எல்லாவகையான நிர்வாகங்களிலும் பெண்கள் கலந்து கொள்ளும் இக்காலத்தில் பெண் போலீஸும் இன்றியமையாது வேண்டற்பாலதே.

வெட்டுத் தலைகள்.

பர்மாக் கலகத்தில் சம்பந்தப்பட்டு வெட்டுண்ட எதிரிகளின் பதினறுதலைகளை வைத்துப் படம்பிடித்து அப்படம் தமிழ்நாடு

முதலிய பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது. இது எவ்வளவு கொடிய செய்கை யென்பதை அறிஞர்கள் யோஜிக்க வேண்டு கிறோம். எதிரிகள் கொடியன செய்தவர்களாகவிருந்தால் அவர் களின் தலைகள் வெட்டப்பட்டது கண்டு நாம் வருந்தவில்லை எனினும் அத்தலைகளை மேஜைமீது அடுக்கிப்படம்பிடித்து அப்படம் பத்திரிகையில் வெளியாகும் வரை அனுமதியளித்த நிர்வாகிகளின் செயல் கண்டுதான் இங்கு நாம் வருந்துகிறோம். இது மிகக் கொடுங்காக்ஷி. இதுபற்றிப் பர்மாசர்க்கார் தங்கள்குற்றத்தைஒப்புக் கொண்டு ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்களாயினும், அப்படம் எப்படி எவரால் பிடிக்கப்பட்டதென்பது தமக்குத் தெரியாத செயல்என அவ்வறிக்கையில்குறிப்பிட்டுள்ளது ஆச்சரியமாகவிருக் கிறது. இது அரசியல் பாதுகாப்பாளர்கள் அறியாத செய்கை யென்பது நாம் ஒப்புக்கொள்ளமுடியாத விஷயமாகும்.

தேசியசபையின் கவலை.

இரண்டாவது வட்டமேஜை மஹாநாட்டிற்கு மஹாத்மாஜீ லண்டன் செல்லுமுன் இந்தியாவின் நடைபற்றி யோஜிக்கக்கூடிய தேசிய காங்கிரஸ் காரியக்கமிட்டியின் கூட்டம் மிகுந்த கவலைக் கிடமான நிலைமையில் கலைந்திருப்பதாய்த் தெரிகிறது. அதுபற்றி முடிவாக யோஜிக்க சிம்லா சென்ற மஹாத்மாஜீயும் அதிருப்தி யான நிலைமையில் திரும்பியிருப்பது வருந்துதற்குரிய தொன்று கும். எவ்வகையிலும் மஹாத்மாஜீ லண்டன் செல்ல வேண்டு மெனப் பலரும் எதிர்பார்த்த நிலைமையில் அது பற்றி ஒரு முடி வும் புதிய வைசிராய்-மஹாத்மா சம்பாஷணையில் ஏற்பட இட மில்லாமல் திரும்ப நேர்ந்தது கண்டு யாவரும் ஏமாற்றமடைவர். ஆயினும், புதிய வைசிராய்ப் பிரபு எவ்வகையிலும் மஹாத்மாஜீயை லண்டன் அனுப்பும் விஷயத்திலும், மஹாத்மாவும் லண்டன் செல்லும் விஷயத்திலும் ஒருமனப்பட்டுள்ளதால் எவ்வகை யிலும் அதற்கு மத்தியிலுள்ள தடைகள் நீங்கி மஹாத்மா லண் டன் செல்ல சந்தர்ப்பமளிக்கவேண்டுமென எல்லாம்வல்ல இறை வனை இறைஞ்சி ஏத்துகின்றோம்.

அதிசயக் கொத்து.

I. பட்டணங்களில் சிறந்த பாரிஸ் நகரத்தில் 'ரீகல்' (Regal) என்னும் பெயர்புனைந்த பிரஞ்சு பத்திரிகை யொன்று பிரசுரிக்கப்படுகிறது. அப்பத்திரிகை பிரசுரிக்கப்படும் காகிதம் பிசைந்த ஒரு வகை மாவால் ஆக்கப்பட்டது. பத்திரிகையை முழுதும் பார்வையிட்ட பின்பு அதனைச் சுருட்டிப் புசித்தால் சிறு பசியைத் தணித்துவிடுகிறதாம்.

II. 'மட்ரிட்' என்னும் நகரில் "லியுமினேரியா" (Lumin aria) என்னும் பெயருடைய பின்னேர் பத்திரிகை பிரசுரஞ் செய்யப்படுகின்றது. அதன் எழுத்துக்கள் நிபாக்கினி என்னும் சுயம்பிரகாஸவஸ்து சேர்த்த மையால் அழுத்தப்படும். அவ்வஸ்து மின்சார சேர்க்கையாலாயது. பத்திரிகை படிப்பதற்கு வெளிச்சம் வேண்டுமென்கிற தேவையேயில்லை. நல்ல மழைக்காலிருட்டினும் தாராளமாய் வாசிக்கலாம். அந்த நோக்கத்தோடுதான் அது பிரசுரஞ் செய்யப்பட்டுவருகிறது. அதனுடையமை, நல்ல இருட்டில் தான் அதிகமாகப் பிரகாசிக்கும் இயல்புடையது.

III. பிரான்சுதேசத்துக் கரையோரப்பட்டினங்களில் "லிக் கரியர் டீயஸ்," "பேனீயேர்ஸ் லாநைடீ" என்னும் இருபத்திரிகை கள் பிரசுரஞ்செய்யப்படுகின்றன. அவைகள் தண்ணீரால் சிறிதும் பழுதடையா இயல்புடைய கடுதாசியில் அச்சிடப்படுகிறது. கடலி லாவது, ஆறு குளங்களிலாவது இறங்கித் தொழில் புரிவோர், ஸ்நானஞ்செய்வோர் எவரும் கையுடன் வைத்து வாசித்துக் கொள்ளலாம். மீன் பிடிப்பவர், படகோட்டிகள் இவர்கள் வசதிக் காகவே அப்பத்திரிகைகள் இவ்விதக் காகிதத்தில் அச்சடிக்கப் படுகின்றதாம்.

IV. நோர்வே தேசத்திலே உரமான ஓர் வகைக் காகிதத் தில் ஒரு பத்திரிகை பிரசுரிக்கப்படுகின்றது. பத்திரிகையிலுள்ள விஷயங்களெல்லாம் பார்த்தபின், அக்காகிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித்துத் தேவைக்குவேண்டிய கயிறாகத் திரித்துக் கொள்ளலாம்.

சி. கு. நா.

நாற்றிசை நடப்பு.

கள்ளுக்கடை மறியல்.

காரைக்குடி ஜில்லாவிலுள்ள தேவகோட்டை, கண்டதேவி, கல்லுப்பட்டி, ஆராவயல், அமராவதிபுதூர், தாணுவயல், கீழ்வயல், மாரிச்சப்பட்டி, ஆண்டிவயல், தளக்காவயல், சூரக்குடி முதலிய வூர்களில் கள்ளுக்கடை மறியல், ஜில்லாக்காங்கிரஸ் காரியதரிசி திரு. பொ. திருகூடசுந்தரம் பிள்ளை யவர்கள், தேவகோட்டை தாலுகா காங்கிரஸ் தலைவர் திரு. மாணிக்கவாசகம் அவர்கள், புதுக்கோட்டை தேசஊழியன் ஆசிரியர். ஆ. சு. நாகரத்தினம் அவர்கள்,தொண்டர்படைத் தலைவர் ராம. அருணாசலம் அவர்கள், சொர்ணமூர்த்தி பெண்பாடசாலை மாணவிகள் முதலியோர்களின் தீவிரப் பிரசாரத்தினால் நன்றாக நடைபெற்று கள் விற்பனை மிகவும் குறைந்து குத்தகைதாரர்களுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றன. அல்லாமல், மேற்காட்டிய ஊர்களிலுள்ள ஆதித்திராவிடர்களும், பள்ளர்களும், வலையர்களும் இனிமேல் கள் குடிப்பதில்லை யெனத் தங்களுள் உறுதிசெய்து கொண்டதுடன் தங்கள் தங்கள் ஜாதியாரையும் கள் குடியாமலிருக்கக் கட்டுப்பாடும் செய்துவைத்திருக்கின்றார்கள். ஷை பிரசாரகர்களால் இவ்வித நன்மைகள் ஏற்பட்டது நாட்டுக்கு நலமே. மற்றும், அவர்கள் தாணுவயல், கீழவயல், மாரிச்சப்பட்டி ஆண்டிவயல், ஆகிய இடங்களிலுள்ள பணம்படைத்த செல்வர்களிடம் இனி கள் ளிறக்க குத்தகைக்குத் தென்னமரங்கள் விடுவதில்லை யென்றும், கள்ளுக்கடைகளை ஏலத்தில் எடுப்பதில்லை யென்றும் உறுதி மொழிகளைப் பெற்றிருப்பதாகவும் அறிந்து பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

காரைக்குடி அரசியல் மகாநாடு.

இம் மகாநாடு ஆகஸ்டு மாதம் 29, 30 தேதிகளில் காரைக்குடியில் நடைபெற ஏற்பாடுகள் நடந்துகொண்டுவருகின்றன. இம் மகாநாட்டினை யொட்டி பெண்கள் மகாநாடு, இளைஞர்

மகாநாடு, விவசாய மகாநாடு முதலிய மகாநாடுகளும் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. இவைகட்குத்தலைவர்களாகத் தேச பக்தர்களிற்சிறந்த திரு. புலுசு சாம்பமூர்த்தி, டாக்டர் எம்பெருமாள் நாயுடு, திரு. வேதரத்தினம் பிள்ளை, திரு. சி. பி. சுப்பையா ஸ்ரீமதி. ருக்மணி லட்சுமிபதி முதலிய கனவான்களைத் தேர்ந்தெடுத்திருப்பது மிகுதியும் பாராட்டத்தக்கதே. மகாநாடுகள் சிறப்பாக நடந்துமுடிய திருவருள் சுரக்குமாக.

தேசீயக்கொடியின் நிர்ணயம்.

கொடிக்கமிட்டியார் யாதாஸ்தை அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி அங்கீகரித்துவிட்டது, கொடிக் கமிட்டியார் யதாஸ்து யாவராலும் முழுமனதுடன் அங்கீகரிக்கும்படி தயாரித்திருக்கின்றனர். காரியக்கமிட்டி அவர்களது உழைப்பைப் பாராட்டியிருப்பதே போதிய சான்றும். கமிட்டியாரால் நிர்ணயிக்கப்பட்ட கொடியின் தன்மையாவது:— முந்திய கொடியில் சிறிதே மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. முதலில் கெட்டி மஞ்சள் வர்ணமும், அதற்கடுத்து வெள்ளை வர்ணமும், அதன்கீழ்ப் பச்சைவர்ணமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நடுவிலுள்ள வெள்ளைவர்ணத்தில் நல்ல நீல நிறத்தில் கைராட்டின உருவம் வைக்கப்பட்டிருக்கிறது. இங்ஙனம் அமைந்த தேசியக்கொடியின் வர்ணங்கள் கீழ்க்காணும் கருத்துக்களைக் காட்டுவனவா யுள்ளன அவை:— மஞ்சள் நிறம் தைரியத்தையும், தியாகத்தையும்; வெள்ளை நிறம் சமாதானத்தையும், உண்மையையும்; பச்சைநிறம் நம்பிக்கையையும் ஆண்மையுமேயாம். இவைகளின் மத்தியிலுள்ள கைராட்டினம் பாமர ஜனங்களின் நம்பிக்கையை உணர்த்துகின்றது.

பிள்ளை வரமளிக்கும் பெரியார்.

தஞ்சை ஜில்லா, திருத்துறைப் பூண்டித் தாலுகா, வேலாக்குடி போஸ்ட் G. தேசிகாசாரியார் என்னும் முதியவர், மகாகணபதி கிருபையால் பெரிய யோகீஸ்வரருடைய ஆசீர்வாதம் பெற்று, இஷ்ட தெய்வ உபாசனையினாலும், யோகீஸ்வரர் அருளிய பச்சிலை மூலிகைகளாலும் புத்திரப்பேறு வேண்டுவோர்க்கு, அவ்விருப்பம் நிறைவேறச்செய்ய பகவத்கடாக்ஷம் பெற்றிருக்கிறாராம். அவ்வாறே செய்து பல உறுதிமொழிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறாராம்,

மதிப்புரை.

'சன்மார்க்கன்' என்னும் பெயரிய தமிழ்மாதப் பத்திரிகை (தாய் ஒன்று-சேய் மூன்று) ஒன்று வரப்பெற்றோம். இது பொன்வேற்கரத்தனும் புள்ளிமயில் வாகனன் இனிதமர்ந்துறை யும் பழனி மலையிலிருந்து வெளிவருவது. இதன் ஆசிரிய பீடத் தை அலங்கரிப்பவர் "சுவாமி சிநேசம்" அவர்கள் ஆவர். டபிள் கிரௌன் சயிஸ் 8 பாரம் 64 பக்கங்களுடன் சீரிய செந்தமிழ் நடை கொண்ட இப்பத்திரிகை தனது பெயருக்கேற்ப அரிய இனிய விஷயங்களைத் தன்னகத்தேகொண்டு மிளிர்கின்றது. 'தமிழை வளர்ப்பதெப்படி?' 'பெண்களின் உரிமை' 'போய்வரு கிறோம்' 'அநுபவப்படிப்பு' என்ற கட்டுரைகள் தமிழ்கற்றோர் விரும்பிப்படிக்கும் சுவையுடையனவாய்த் திகழ்கின்றன. கொங்கு மண்டல சமரஸ சன்மார்க்க சங்கத்தாரும், அதன் தலைவரும் இதன் மூலம் தமிழ்வளர்க்க முன்வந்தமை பெரிதும் பாராட்டற் குரியதே. இதன் வருட சந்தா ரூபாய் 1—0—0 அன்புகூர்ந்து நம்பாலனுப்பிய சன்மார்க்கனை மகிழ்வுடனேற்று ஆசிகூறுகின் றோம். நமது நன்றியறிதல் ஆசிரியர்க்கு உரியதாகுக.

விலாசம். ஆசிரியர் சன்மார்க்கன்

காரியாலயம். பழநி.

வரப்பெற்றோம்:— அண்ணாமலை பிராம்மண சந்யாஸி ஸ்ரீரமணானந்த சுவாமிகளால் இயற்றியருளிய விசார சங்கிரக வினாவிடை, உபதேச சாரம், உபதேச மஞ்சரி, உபதேச வுந்தி யார், என்ற நான்கு நூல்களும், திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ P. S. ஆசாரியாரவர்கள் எழுதிய "இருபெருங்கானவர்" என்ற புத்தக மும், "குலாலமித்திரன்" என்றமாதப்பத்திரிகையும் வரப்பெற்றோம். இவைகளை எம்பால் அனுப்பிய ஆசிரியர்கட்கு வந்தனம். புத்தகம் பத்திரிகைகளின் மதிப்புரைகள் அடுத்தமணியில் வெளியிடப் படும்.

பைந்தமிழுக்குத் தொண்டுபுரிந்த

பன்னிருசெல்வர்கள்.

பாற்கடலோன் தொகுத்தது.

சிவன் தூதுசென்றவரலாறு.

"நயத்துடன் கேட்டார் வாய்ப்பிணிக்குந் தகையதாய்த் தேவாரம்பாடித் தேவர்தேவனை மகிழ்விக்கும் வன்றொண்டராகிய ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் தொண்டைநாட்டுத் திருத்தலங்களைத் தரிசித்து வருவதாகப் பரவையாரிடம் கூறி விடைபெற்றுச் சென்றனர். அன்பர் தம் பிரிவிற்காற்றாத ஆரூர்ப்பரவையார் தனிமையிலிருந்து வருந்திக்கொண்டிருந்தார். பின்னர், சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்துகொண்டு வாழ்கின்றாரென்பதைக் கேட்டதும் பரவையாருடைய வருத்தம் பன்மடங்கு அதிகரிக்கத் தம்மையும் அறியாது தளர்ந்திருந்தார். இப்போது தம்பிரான் தோழர் திருவாரூரிலேயே எழுந்தருளியுள்ளாரென்று அறிந்தும் அம்மையார் பெரிதுங்கோபங்கொண்டார். பரவையாருடைய இந்நிலையை அறிந்த ஆரூரர் அவருடைய மாளிகைக்குச் செல்ல மனம் நொந்து கற்றமாந்தர் சிலரைப் பரவையாரிடத்திற்கு அனுப்பினர். அவர்கள் அம்மையாருடைய ஊடலை நீக்க முயற்சி செய்தபோது "பரவை, குற்றமுள்ள ஆரூரரைக் குறித்துப்பேசும் பேச்சு அடியேன் உயிரைப்போக்கும்" என்ன, அவர்கள் அச்சமுற்றுத் திரும்பிவிட்டார்கள்.

அப்போது திருநாவலூரர் யாதுசெய்வதென அறியாதவராய் நள்ளிரவிலேயே சிவபெருமானைச் சிந்தித்தார். உடனே அடியவருடைய கவலைநோயை நீக்குங் கண்ணுதற் பெருமான் தோன்றி, "உனக்கு உற்றது என்?" என்று கேட்க, சுந்தரமூர்த்தி சுவாமிகள் "பரவையாரின் ஊடலைத் தீர்த்தருளவேண்டும்" என்று விண்ணப்பித்தார். ஆரூரண்ணல் ஆலால சுந்தாருடைய அன்புக்

கிரங்கிப் பரவையார் இல்லத்திற்குச் செல்ல இசைந்து அந்த நள்ளிரவிலேயே ஆலயத்திலுள்ள ஆதிசைவர் வேடந்தாங்கிச் சென்று பரவையார் மாளிகையின் கதவைத் தட்டியழைத்தார்; துயரத்தால் துயிலாதிருந்த அம்மையாரும், 'கதவைத்தட்டுபவர் ஆதிசைவர்போலும்! அவர் பாதிஇரவில் வந்ததென்னோ?' என்று எண்ணிப் பதைத்துவந்து கதவைத்திறந்து அழைத்துச் சென்று "இப்போது இங்கு எய்தவேண்டியதென்?" என்று கேட்டார். சுவாமிகள் "நீ மறுக்காது செய்வதானால் யான் வந்ததுரைப்பேன்" என்றார். அதற்குப் பரவையார். "நீர் அருளிச் செய்யும். செய்யக் கூடியதாயின் செய்வேன்" என்றார். பின்னர்ப் பெருமான், "நம்பியாரூரர் இங்குவரவேண்டும்" என்றார். பரவை, "என்னைப் பிரிந்து திருவொற்றியூருக்குப்போய்ச் சங்கிலியை மணந்தவருக்கு இங்கு என்னவேலை. தாங்கள் சொன்னது அழகாயிருக்கிறது." என்றார் நாதனார் "கோபத்தைவிட்டு நம்பிசெய்த குற்றங்களைக் கொள்ளா திருத்தற்கன்றோ யான் வேண்டினேன். மறுப்பது அடாது" என்றார். பரவை "இதுபற்றிவருதல் தங்கள் பெருமைக்குத் தகுதியன்று. ஒற்றியூரிலிருந்து வந்தவர் இங்கேவர இசையேன். தாங்கள் போகலாம்" என்றார். அதுகேட்ட நம்பர் உளத்தே நகைத்துத் தம் உண்மைத் தன்மையைக்காட்டாது, தந் தோழருடைய வேட்கை மிகுதியைக் காணத்திரும்பினார்.

சுந்தரர், சிவபெருமானைத் தூதனுப்பியது குற்றம் என்ற எண்ணம் ஒருபுறமும், பரவையார் ஊடல் தீரவேண்டும் என்ற எண்ணம் மறுபுறமுமாகச்சிவபெருமானுடைய வரவை எதிர்நோக்கியிருந்து, அவர் வருகையைக் கண்டு, அணைகடந்த வெள்ளம்போல் முன் சென்று வணங்கிச் சுவாமி! "அன்று அடிமையைத் தடுத்தாண்டீர். அதற்கிசைய இன்று பரவை வெகுளியைத் தீர்த்தருளினீர்" என்றார். உடனே சிவபெருமான் நம்பியாரூரரை நோக்கி, நீ சொன்னபடி நான் சென்று பரவையை வேண்டவும் அவள் மறுத்தாள்" என்றார். அது கேட்ட ஆரூரர், ஐயன் ஆதிசைவனைச் சென்ற திருவிளையாடலையறியாது, வருத்தமுற்றுப் பணிந்து, ஆண்டவனே! எல்லாம்வல்ல தேவரீர் சொல்லையோ பரவை மறுப்பாள்? இது வியப்பு! வியப்பு!! சுவாமிகள் பரவையிடஞ் செல்லாவிடின் அடியேன் உயிர்போம். "என்று வீழ்ந்தார். தம்பிரான் அவரை இரக்கத்துடன் நோக்கி, "நீ இப்போதே

பரவையை அடையும்படி செய்வோம். துயரப்படாதே" என்று கூறி, மீண்டுந் தம்முடைய உண்மைத் திருவுருவோடு தேவர்கள் புடைசூழப் பரவையார் இல்லத்தை நோக்கிச் சென்றார். முன் வந்த ஆதிசைவர் முதல்வரே யென்று பல குறிப்புக்களால் பின்பு உணர்ந்த பரவை சிவபெருமான் வாக்கை மறுத்தமைக்காகத் தம்மைத் தாமே வெறுத்துக்கொண்டு மனம் நொந்து வாயற்படி யிலேயே இருந்தார். அப்போது சிவபெருமான் தம்முடைய உண் மைத் திருக்கோலத்தோடு மறுபடியும் வருவதைக் கண்ட அம்மை யார் நடுக்கமுற்று மகிழ்ச்சிபொங்கப் பெருமான் தாள்களில் விரை ந்து வீழ்ந்தார். பரவை அம்மையாருடைய திருமாளிகை கயிலைமலை யை யொத்திருந்தது. பெருமான் பரவையை நோக்கி, "அன்பால் ஆரூரன் ஏவ யாம் மீண்டும் வந்தோம். முன்போல் மறுக்காதே. நின்னைப் பிரிந்துவருந்தும் சுந்தரன் இங்குவர இசையவேண்டும்" என்றருளிச் செய்தார். அம்மையார் வருந்திய உள்ளத்தோடு கைகளைத் தலைமீது குவித்துக்கொண்டு, "சுவாமி! தேவரீரை இங்குவரப்பெற்ற அடிமை செய்த தவம் என்னே? தேவரீர் அன்பர்க்காக இரவுமுழுவதும் அங்குமிங்கும் உழல்வீரானல் அடியேன் இசையாது என்னசெய்வேன்" என்று கூறினர். பெரு மான், "பரவையே! உன்குணத்திற்கேற்ப நன்மையே கூறினய்" என்று திருவாய்மலர்ந்து எழுந்தருளி, தம்மை எதிர்பார்த்திருந்த வன்றொண்டர்பால் விரைந்து சென்று, "யாம் பரவையாருடைய கோபத்தைத் தணிவித்தோம். இனி நீ செல்லலாம்" என்றார். வன்றொண்டர், இம்மையில் இன்பத்தையும் மறுமையில் வீட்டை யும் ஒருங்கே தரவல்ல முழுமுதற்பொருளே! இனி எனக்கு என்னதுன்பமிருக்கிறது?" என்று கூறிப் பூங்கோயிலுக்கு எழுந் தருளிய புண்ணியனரைப் பின்சென்று தொழுது பரவைவீட்டிற்கு எழுதருளினர். அடியவரோடு சென்ற ஆரூரரைப் பரவையார் எதிர் கொண்டு அழைக்க, அவர்கள் ஒரு கரத்தை ஒருவர்பற்றிக் கொண்டு திருமாளிகை சேர்ந்தார்கள். பிறகு இருவரும் ஈருடலும் ஓருயிருமாயிருந்து வீதிவிடங்கப் பெருமானுடைய திருவருட் பெருக்கைப் பலகாலும் நினைந்து நினைந்து மகிழ்ந்திருந்தார்கள்" என்பது.

இச் சம்பவத்தின் இனிய செய்தியைத் தமிழ் நூலாசிரியர்கள்

தத்தம் நூல்களில் அழகாகக்கூறியிருப்பது சைவசீலர்கட்கும் செய்யுள் விருப்புடையாருக்கும் மிகுதியும் இன்பம் தருவதாகு மென்று அவைகளிற் சில கவிகளை இதன்கீழ்த் தருகின்றோம். அவை வருமாறு:—

"நாயனீரே நானுமக்கிங் கடியேனாகி னீரெனக்குத்
தாயினல்ல தோழருமாந் தம்பிரானா ரேயாகி
லாய வறிவு மிழிந்தழிவே னயர்வு நோக்கி யவ்வளவும்
போயிவ் விரவே பரவையுறு புலவி தீர்த்துத் தாருமென"

"அன்பு வேண்டுந் தம்பெருமா னடியர் வேண்டிற் றேவேண்டி
முன்பு நின்று விண்ணப்பஞ் செய்த நம்பி முகநோக்கித்
துன்ப மொழிநீ யாமுனக்கோர் தூதனாகி யிப்பொழுதே
பொன்செய் மணிப்பூண் பரவைபாற் போகின் றோமென் றருள்
[செய்தார்"

எனச் சேக்கிழாரும்; (பெரியபுராணம்.)

"அரவக லல்குலார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன் புலவிதீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பானாள்
இரவினிற் றூது கொண்டோ னிணையடி முடிமேல்
[வைப்பாம்."

எனப்பரஞ்சோதி முனிவரும், (திருவிளையாடற்புராணம்.)

"தேடிப் பாடிய சொற்புல வர்க்கித
மாகத் தூதுசெ லத்தர்"
"சுந்தரர் பாட லுகந்திரு தாளைக்
கொண்டுநல் தூது நடந்தவர்"

என அருணகிரிப் பெருந்தகையும், (திருப்புகழ்)

"ஆனா ரிலையே யயனுந் திருமாலும்
காணாதடி முடியைக் காண்பதற்கு—மேனாள்
இரவுதிரு வாரூரில் எந்தைபிரான் சென்ற
பரவை திருவாயிற் படி."

என ஆசுகவி காளமேகப்புலவரும், (தனிநிலைக்கவி.)

"வடியிட்ட செந்தமிழி னருமையிட் டாரூரில்
அரிவையோர் பரவைவாயில்
அம்மட்டும் அடியிட்டு நடைநடந் தருளடிகள்
அடியீது முடியீதென
வடியிட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே"

எனத் தாயுமானுரும், (தாயுமானவர்பாடல்.)

"துரைத்தியாக ராயர்முன் சுந்தரர்க் காவொரு தூதுசென்ற
விரைத்தா மரைமணம் வீசுதல் போல்"—

எனப் படிக்காசுத் தம்பிரானும், (தொண்டைமண்டல சதகம்.)

—"எப்போதும்
அப்பரவை யிட்ட வவிர்சடையோன் றாதில்
அப்பரவையிட்டம் அடுத்தோனும்"

என அந்தகக்கவி வீரராகவரும் பாடி அருளினர். (திருவாரூருலா.)

மக்கள் மனதிற் பதிக்கவேண்டிய
சில அமுதமொழிகள்.

"அன்பனே! நீ பகல்முழுவதும் உண்ணுவதில் காலத்தைக் கழித்தனை! இரவெல்லாம் உறங்குவதில் பொழுது போக்கினை. நவரத்தினங்களுக்கும் மேலாக மதிப்பிடக்கூடிய அரிய மனித ஜன்மத்தை ஒருகாசுக்குக்கூடப் பயன்படாமல் பாழ்படுத்திக் கொண்டனை. அந்தோ! உனது அறியாமைக்கு இரங்குகின்றேன்."

"உண்மை ஆசிரியனே வண்ணனைப்போலவும். மாணவனே ஆடையைப்போலவும், படைப்புக்கடவுளாகிய பகவானே சவுக்காரத்தைப்போலவும் மனதுட்கொண்டு ஞானம் என்ற கல்லின் மீது துணியைத் துவைத்தால் அதிலுள்ள அழுக்கு வெளிப்பட்டுத் தூயதன்மையை அடையும்."

"நீ ஒருகாரியத்தில் ஏமாந்து போனாலும் பிறனொருவனை ஏமாற்றாதே. ஒருகால் நீ ஏமாந்துபோனால் உனக்குச் சுகமுண்டு. பிறனை ஏமாற்றினால் துக்கமுண்டு."

(கபீரடிகள்)

நமது முன்னோர்கள் எழுதிய

ராஜநீதி நூல்கள்.

ஆராய்ச்சி

(ஆந்திர மொழிபெயர்ப்பு)

கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள்.

இராஜ நீதியைப்பற்றிய நூல்கள் சம்ஸ்கிருத பாஷையில் மிகுதியாக வுள்ளனவென்பது அப்பாஷைவல்ல பண்டிதர்கள் நன்கறிவர். ஆனால், அவர்களில் பெரும்பாலோர் அவைகளை ஆழ்ந்து படித்துணர்வதில் போதுமான முயற்சி யெடுத்துக்கொண்டிருப்பதாக நமக்குப் புலப்படவில்லை. இப்பொழுது நமது தேசத்திலும் மேற்றிசை நாடுகளிலும் அரசியல் நீதிநூல்களை ஆராய்வதில் சிலர் முனைந்திருப்பதாக அறிகிறோம். அவை போதாது. மிகுதியானவர்கள் ஆராய் முற்படவேண்டும். நாமிங்கு விவரிக்க எடுத்துக்கொண்ட கட்டுரையில், நம்முன்னோர்கள் நன்றாக வியற்றிய நீதி நூல்களது பெயர்களையும், அவைகளது அருமை பெருமைகளையும், பயன்களையுமே விளக்க நினைந்துள்ளோம். அதனுடன் காமந்தகநீதிசாரம், சோமதேவ சூரியின் நீதி வாக்கியாமிர்தம், வைசம்பாயனின் நீதிப்பிரகாசிகை, சுக்கிரநீதிசாரம், சாந்திபர்வத்திலுள்ள நீதிப்பிரசங்கங்கள், கௌடில்யன் அர்த்தசாஸ்திரம் ஆகிய நூல்களையும் தனித்தனியாக ஆராய்ந்து ஆசிரியர்களுடைய கருத்துக்களையும், அவர்கள் பிறநூல்களுள் கொண்டுள்ள அபிப்பிராயங்களையும் விவரித்து அத்தகைய பேதங்களுக்கு ஏதுக்கள் யாவை யென்பவற்றையும் ஆராயவும் கருதியுள்ளோம். இத்தகைய ஆராய்ச்சிகட்குப் போதிய சாதனங்கள் நம்மிடத்து இல்லாதிருப்பினும், சுருங்கிய சாதனங்களை வைத்துக்கொண்டு அவைகளை ஏற்றவகையில் உபயோகித்துத் தொடங்கிய ஆராய்ச்சியை ஒருவாறு முடித்துவிடவும் முடிவுகட்டியிருக்கிறோம்.

மேற்குறித்த விஷயங்களை ஆராயத்தொடங்கு முன்னர்

கவனிக்கவேண்டிய சில விஷயங்களிருக்கின்றன. அவை:— சம்ஸ்கிருதத்திலுள்ள ராஜநீதிக் கிரந்தங்களை ஆராய்வதில் ஆதாயமென்ன? தற்காலத்திற்கும், முற்காலத்திற்கும், அதாவது வடமொழி நூலாசிரியர்கள் காலத்திற்கும் நிரம்பப் பேதமிருக்கின்றதா? அப்போதிருந்த விருப்பத்திற்கும், உறுதிக்கும், இப்போதுள்ள இச்சைக்கும், நிர்ணயத்திற்கும் சம்பந்தமிருக்கின்றதா? அரசியல் விஷயங்களில் நாம் பிரதானமாகக் கணிக்கின்ற பிரஜைகள் பிரபுத்வத் திற்குள்ளாகும் விஷயங்களில் அக்காலக் குடிமக்களின் எண்ணம்யாது? இத்தகைய சந்தர்ப்பத்தில் பிராசீன கிரந்தங்களின் ஆராய்ச்சி இக்காலத்தில் நாம் அனுபவிக்கின்ற கஷ்டங்களுக்கு உதவியாகுமா? என்பவைகளே. இவைகட்கு ஏற்றசமாதானம் சொல்லவேண்டுவது நமது கடமையாயிருக்கிறது.

முற்காலத்திற்கும் தற்காலத்திற்கும் நிலைமையின் வேறுபாடு விசேடமாகவிருப்பினும், நம்முன்னோர்கள் இயற்றிய நீதிநூல்களிலுள்ள சித்தாந்தங்களில் சில எப்பொழுதும் மக்கள் பின்பற்றுவதற்கு உரியனவே. காரணம்—மானிட இயற்கையில் விஸ்தாரமான வேற்றுமைகள் இல்லாமலிருப்பதே. நீதிசாஸ்திரங்களினின்று தர்க்கிப்பதற் குரியதுமான விஷயங்கள் பலவிருப்பினும் அவைகளில் முக்கியமானவை—ராஜ்யதிகாரம் எத்தகையது? அதிகாரத்திலுள்ள பிரிவின் ஒழுக்கம் எத்தன்மையது? அதிகாரிகளினால் குடிகளுக்கு துன்பம் தீங்காதிகள் உண்டாகாமல் இருப்பதற்குச் செய்யவேண்டியதென்ன? என்பவைகளே. அதிகாரத்திற்கும் மனித சுபாவத்திற்கும் உள்ள பரஸ்பர சம்பந்தங்களை விவரிப்பதில் அரசியல் நூல்களின் முக்கிய நோக்கம் மேற்கூறியவைகளைத் தெளிவுபடுத்துவதேயாம். நம்முன்னோர்களது சூத்திரம் இப்பொழுது மட்டுமேயல்லாமல் முற்காலத்திலுங்கூட நன்றாகத் துலக்கமடைந்திருந்தன.

நீதிநூல்களின் ஆராய்ச்சி, தேசசரித்திரப் படிப்பினால் மிகுதியும் முன்னேற்மடைவதற்குரியது. தேசசரித்திரப் படிப்பு மக்களுக்கு அத்தியாவசியமானதென்று நம்மில் பலர் நன்கறிந்திருக்கின்றனர். காலானுசாரமாக தேசங்களிலுண்டாகிற மாறுபாடுகளைப் போதிய திருஷ்டாந்தங்களுடன் அறிவதே தேசசரித்திரப் படிப்பினையினால் வரும் பயன். இம்மாறுபாட்டால் நமது ஆசாரங்கள்,

பிரதிஷ்டாபனங்கள், சாங்கிக கஷ்டங்கள் முதலான வெளிவிஷயங்களே யல்லாமல் அந்தரங்கமான அபிப்பிராயங்கள்கூடவிருக்கின்றன. அன்றியும், இவ்விரண்டு விதமான மாறுபாடுகளுக்குக் காரியகாரணரூபமான சம்பந்தமும் இருக்கிறது. அது-அபிப்பிராயம் மாறுபடுவதனுல் ஆசாரம் மாறுபடுவதும், ஆசாரம் மாறுபடுவதனுல் அபிப்பிராயம் மாறுபடுவதுமேயாம். அரசியல் விஷயத்தில் நமது முன்னோர்களது உட்கருத்துக்களைத் தெரிந்துகொள்வதற்கு ராஜநீதி கிரந்தங்களே முக்கியமானவை.

சம்ஸ்கிருதத்தில் காவ்யங்கள், நாடகங்கள், இவைகளது வியாக்கியானங்கள் ஆகியவைகளை இயற்றியவர்கள் ராஜநீதி கிரந்தங்களின் சகாயத்தைக்கொண்டே இயற்றியிருக்கின்றனர். இரகுவமிசம், மாகம், முத்திரராக்ஷஸம், மல்லிநாதசூரியின் வியாக்கியானங்கள் முதலியன இவற்றிற்குச் சான்றும். உத்தம ராஜகுணம் எது? திக்குவிஜயத்திற்குத் தகுந்த காலம் எது? என்ற கேள்விகளுக்கு உரிய விடைகள் காவியங்களிலிருக்கின்றன. காவியங்களுக்கும், ஸ்மிருதிகளுக்கும் உரை வகுத்தவர்கள் அவர்களது எண்ணங்களைப் பிறர் உணரும்படி நீதிநூல்களிலுள்ள வசனங்களைச் சாதாரணமாக எடுத்தாண்டுள்ளனர். இக்காரணத்தைப்பற்றிக்கூட ராஜநீதி கிரந்தங்களின் ஆராய்ச்சி மிகவும் உபயோகமானதென்று உரைக்கலாம்.

நமது முன்னோர்கள் இயற்றியருளிய நீதிநூல்கள் அனைத்திலும், கௌடில்யன் அர்த்தசாஸ்திரமே உயர்வுடையது; மிகவும் பழைமையுமானது. அந்நூலில் ராஜ பரிபாலனத்திற்கு உரியவிஷயங்கள் நன்றாக வருணிக்கப்பட்டுள்ளன. இதற்குப் பின்னெழுந்த நூல்களெல்லாம் கௌடில்யனது கிரந்தத்தைப் பின்பற்றியே எழுதப்பட்டுள்ளன. சம்ஸ்கிருத ராஜநீதி கிரந்த ஆராய்ச்சியுடன் நீதிநூல்களையும் உடன்சேர்த்து ஆராய்வது ஒழுங்கானதெனினும், இரண்டு காரணங்களினுல் நீதிநூல்களின் ஆராய்ச்சியை இறுதியில் ஆராய எண்ணிக்கொண்டிருக்கிறோம். முதற்காரணம்-கௌடில்யன் அர்த்தசாஸ்திரம் ஆராய்ச்சியோடிருப்பது. இரண்டாவது காரணம்-மற்ற நூல்கள் ஆராய்ச்சிசெய்யப்பட்ட பின்னரே கௌடில்யன் பெருமை நன்றாக விளக்கம்பெற்றிப்பது. ஆனதனுல், முதலில் காமந்தக நீதிசாரத்தை ஆராயத்தொடங்குகிறோம்.

காமந்தகன் எக்காலத்தினனே நாமறியோம். கிறிஸ்து சகம் 300-ஆம் ஆண்டினன் என்று சிலரும், 700-ஆம் ஆண்டினன் என்று வேறு சிலரும் கூறுகின்றார்கள். இவற்றில் எது உண்மை என்று இயம்புதற்கு இயலவில்லை. இதுபற்றி நமக்குத்தோன்றும் அபிப்பிராயம் இரண்டு. இவற்றில் ஒன்று:— பூர்வகாலத்தில் கிழக்குச் சமுத்ர த்வீபத்தில் நமது நாகரிகம் மிகுதியாக வியாபித்திருந்தது. அத்வீபத்தில் 'பலித்வீப' மென்பது ஒன்று. அதில் காமந்தக நீதிசாரமென்ற பெயருடன் ஒருநூல் வழங்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. நான்காவது நூற்றாண்டிலிருந்தே பலித்வீபத்தில் பௌத்தமதம் பரவி பிரசித்தம்பெற்றிருந்தது. காமந்தக நீதிசாரம் ஹைந்தவநூல். இந்நூல் நான்காவது நூற்றாண்டிற்கு முன்னரேயே பலித்வீபஞ்சென்று பரவியிருக்கவேண்டும். இக்காரணங்கொண்டு இந்நூல் கி. பி. 300-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதென்று கூறக்கூடியதாயிருக்கிறது. ஆனால், இதனைச் சிலர் மறுக்கின்றனர். பலித்வீபத்தில் காமந்த நீதிசாஸ்திரம் பரவியது பற்றியும், ஆராய்ச்சிசெய்திருப்பதைக் குறித்தும் ஒன்றுமே நாம் அறியுமாறில்லை. ஆயின், அவைபற்றி யாரும் இன்னமும் பரிசோதிக்க முயன்றாரில்லை யென்பது உறுதியான விஷயம். இல்லை. அவை ஆராயப்பட்டு அதன் காலம் மூந்நூற்றாண்டென்று முடிவு கட்டப்பட்டுள்ளது எனக் கூறப்படுமாயின், அது மறுக்கத்தக்கதே. அந்நூல் நான்காவது நூற்றாண்டுக்கு முன்னர், அத்வீபத்திற்குச் சென்றுள தென்பதற்குப் போதிய ஆதாரமில்லை. பௌத்தமதம் வியாபித்த பின்னர் இந்நூல் அங்கு பரவியிருக்கவேண்டும். நமது தேசத்திற்கும், அந்தத்வீபத்திற்கும் சம்பந்தம் ஏற்பட்டது நான்காவது நூற்றாண்டுக்குப் பின்னரே யல்லாமல் முன்னரென்று கூறுவதற்கில்லை. அல்லாமல் மதத்திற்கும், நீதிசாஸ்திர சித்தாந்தத்திற்கும் யாதுசம்பந்தம்? நூலாசிரியர் இந்துவாயினும், பௌத்தனாயினும், ஜைனனாயினும் அவனது இராஜநீதியில் மதத்தைத்தழுவிய பேதம் எதுவுமிருக்க யேதுவில்லை. ஹைந்தவ மதாதிக்கியம் ஏற்பட்டபோதுதான் காமந்தகநூல் பலித்வீபம் சென்றிருக்கவேண்டுமெனப் புகல்வது யுக்தியின் உபாயமாகாது என்பது.

(தொடரும்.)

சோழநாட்டு மலைமேற் கோயில்

கற்குடி

அல்லது

உய்யக்கொண்டான் திருமலை.

பழனி. திரு. நா. நடராஜ முதலியார் அவர்கள் எழுதுவது.

இச்சிவஸ்தலம் சோழநாட்டு மலைமேற்கோயில்களுள் ஒன்று. மூவர் முதலிகளால் பாடப்பெற்ற பெருமைவாய்ந்தது. இத்திருப் பதி திரிசிராப்பள்ளியினின்றும் தென்மேற்குத் திசையில் 'முட் குறும்பூரு'க்குச் செல்லும் கற்சாலையில் மூன்று மைல் தூரத்தி லிருக்கிறது. தம்பிரான் தோழராகிய 'ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமி கள்' தமது "கற்குடித் தேவாரம்" நான்காம் பாசுரத்தில்:—

"செய்யார் மேனியனே திருநீல மிடற்றினனே
மையார் கண்ணிபங்கா மதயானை யுரித்தவனே
கையார் சூலத்தினாய் திருக்கற்குடி மன்னிநின்ற
எந்தாய் யெம்பெருமா னடியேனையு மேன்றுகொள்ளே"

என்று இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். "உய்யக் கொண்டான் திருமலை" என்ற பெயர் இவ்வூர்க்கு ஏற்பட்டது— "உய்யக்கொண்டான்" என்ற நதியின் பெயரையும், கற்களைக் கொண்டு மலைபோல் உயர்த்தி அழகாகக் கட்டிய ஆலயத்திற்கு 'திருமலை' என்று வழங்கும் பெயரையும் ஒன்றுகூட்டியதாலென்க. கற்குடி—கற்கோயில், மலைமேற்கோயில் கொண்டருளும் சிவபெரு மானுக்கு "உச்சிநாதர்" (உஜ்ஜீவனநாதர்) என்னும் பெயர். தேவி யார் பெயர்—"பெருங்கருணை அம்மையார்" (அஞ்சலாட்சி) இப் பெருமானை ஈழநாட்டரசன் பூசித்துப் பேறுபெற்றதாக அத்தல புராணவரலாற்றால் அறியப்படுகிறது.

மலைமேல் கட்டிய இத்திருக்கோயில், முருகவேளுக்குரிய 'சுவாமிமலை' 'சிக்கல்' போன்ற அழகிய கட்டுமலைக்கோயில். மிக

உயரமாகவும், அமைப்பாகவும், கம்பீரத் தோற்றமாகவுமுள்ள இக்கற்குடி. சிற்பங்களும், சாஸனங்களும் நிறைந்து அகன்றவாயில்களையும், விசாலமான மண்டபங்களையும், நீண்ட பிரகாரங்களையும் உடைத்தாயிருக்கின்றன. ஸ்தூலலிங்கமாக விளங்கும் கோபுர முன்வாயின் கீழ்ச்சுவர்களிலும், பக்கவாட்டுச் சுவர்களிலும் அதிகமான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவைகளின் எழுத்துக்கள் மிகப்பழமையானவை. "பூமன்னு" என்ற முதலடியுடைய சாஸனங்களே இவற்றுள் மிகுதியானவை. "இராஜராஜாஸ்ரய" என்ற சாஸனச் சொற்றொடரால் திருமலைக்கோயில் முதலாம் 'இராஜராஜச் சோழனு'ல் கட்டுவிக்கப்பட்டதென அறியப்படுகிறது. வேறு சில சாஸனங்களில் "நந்திவர்மன்" என்ற பெயர் காணப்படுவதனுல் பல்லவ அரசர்களில் இந்நந்திவர்மன் இவ்வாலயத்திற்குச் சில பூமிகள் தானங்கள் செய்திருக்கவேண்டுமென யூகிக்கக்கிடக்கிறது. அன்றியும், தஞ்சை "வீரராஜேந்திர சோழன்" திருவானைக்காவில் "அபிராமம்" என்னும் அரண்மனையில் தங்கியிருந்தபோது கற்குடிப் பெருமான் வருடாந்திர பிரம்மோற்சவத்திற்குச் சில நிலங்களைத் தானஞ்செய்திருப்பதாக அவ்வாலயக்கிழைச்சுவற்று கல்வெட்டால் அறியப்படுகிறது. முதல் குலோத்துங்க சோழனும், இக்கோயிலுக்குச் சில நிலங்களைத் தானமாகக்கொடுத்து மன்றிக் கோபுர நிர்மாணம், மண்டபம் முதலியவைகளைத் தானமாகக்கொடுத்து சிற்பிகளில் க்ஷத்திரியத் தந்தைக்கும், வைசியத்தாயிக்கும் பிறந்தவனை "மாஹிஷ்யன்" என்ற பெயராலும், வைசியத் தந்தைக்கும், சூத்திரத்தாய்க்கும் தோன்றியவனை "இரதகாரன்" என்ற பெயராலும் அழைக்கப்படுவார்கள் என்று சாஸனத்திலும் வெட்டுவித்திருக்கின்றனன்.

கைதேர்ந்த சிற்பவல்லவர்களைக் கொண்டு சிற்றுளித் திறமையால் நிர்மாணிக்கப்பட்ட இத்திருக்கோயில் காண்போர் கண்ணையும், கருத்தையும் கவரவல்ல வனப்புடையதாக விளங்குகிறது. தெய்வபக்தியும், சிவநேசமும் தலயாத்திரை விருப்பமும் மிக்குள்ள அன்பர்கள் பலர், இத்தலத்தையும், தலப்பெருமானையும் சேவித்துச் சிற்ப நலங்களைக் கண்டு சிந்தைகளித்துச் செல்லுகின்றனர். ஆலயத்துள் "மாமலையார் கேணி" என்ற பெயரிய தீர்த்தமும்,

"திருக்கரமாமாணிக்கம்" என்ற பூந்தோட்டமும் இருக்கின்றன. பராமரிப்பு இல்லாததால் பாழ்பட்டுக்கிடக்கின்றன. இவ்வாறே ஆலயமண்டபங்கள் பல சீர்குன்றிக் கிலகமடைந்துள்ளன. ஆலய முன்வாயில் பெருங்கோபுரம் பூர்த்திபெறாமலே யிருக்கிறது. ஸ்ரீஅருணகிரிநாதர் திருப்புகழாலும் பாராட்டபெற்ற இப்பழைமைக் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள புராதன சாஸனங்களைக் கல்வெட்டுப் பரிசோதகர் ஆராய்வார்களாயின், பண்டையவரலாறுகள் பல வெளிவரக்காணலாம். குன்றுபோல் விளங்கும் இக்கோயில் உச்சிக்கோபுரம் கலங்கரைவிளக்கம்போல் காண்போர் கண்களுக்கு நெடுந்தூரத்திலிருந்தே தெரிவது ஓர் காட்சியாகவிருக்கிறது.

அறிவின் உணவுப் பொட்டகம்.

அனர்த்தப் பரம்பரைகள் யாவை?

புதிதான வாலிபப் பருவம், நிகரில்லாவடிவழகு, மானிடத்தன்மைக்கு மேலான திறமை என்பன.

பகற்காலங் கழிந்தபின் வண்டினங்கள் யாதுசெய்யும்?

மாலையில் சூரியன் மலைவாயில் வீழ்ந்ததும், பங்கயப் பூக்கள் பகலிற்பானஞ்செய்த வெயில்களனைத்தையும், அடியோடு அகற்றும் பொருட்டு இருண்ட நிறமமைந்த தேன்வண்டுகள் அடுக்கடுக்காய் அலர்ந்துள்ள இதழ்களின் நடுவே சென்றுபள்ளிகொள்ளும். இது கண்டன்றோ! 'வண்டு,மலர்ச் சேர்க்கைவிரும்பும்' என்றார் புலவர்.

அறிவு கலங்குவதேன்?

சாஸ்திரங்கள் என்னும் நன்னீரால் அறிவுநன்றாகக் கழுவப் பெற்று களங்கமற்றிருப்பினும், யௌவனம் என்னும் மூர்க்கத்தால் அலைக்கப்பட்டுச் சிதறுவதனால்.

மாயையின் செய்கை என்ன?

பிரகிருதி என்னும் மாயையானது ஆண்பிள்ளையை வாலிபப் பருவத்தில் வெகுதூரம் வலிய இழுத்துத் தீயதான படுகுழியில் வீழ்த்தி விடுவதே.

நற்குணம்.

பெருந்துறை, ஜவுளி

திரு. அ. மீனாட்சிசுந்தரமுலியார் எழுதுவது.

"கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றுமை மேற்கோள் பவர்க்கு"

இப்பரந்த உலகத்தினிடையே செல்லும் வழியறியாது தானென்று நினைக்கப் பிறரொன்று செய்தார்களென்றும், கருதிய காரியம் சிதறியதென்றும், தம்பாலுள்ள குற்றங்களைப் பிறர் மேலேற்றித் தம்மைத் தாமறியாத நேயர்களே!

நம்முடைய மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து நற்குணம் என்னும் நல்விதையை மனமென்னும் நிலத்தில் நட்டுப் பயிர்செய்து பாதுகாப்போமாயின், மேன்மையென்னும் அவ்விதை பயிராகி வளம்பெற்று நமக்கு இவ்வுலகத்திற்கு வேண்டியவற்றையும், மறுவுலகத்திற்கு ஏற்றவையையும் இனிதளிக்கும்.

நாம் ஒருகாரியத்தைச் செய்யத் தொடங்கும்போது நமது மனச்சாட்சி இது நல்லது, இது கெட்டது என்று நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது. நன்மையும் தீமையும் நமது இருதயத்தின் கண்ணே அமைந்துள்ளன. நன்மையைப் பெருக்கித் தீமையை வேர் களைவது நமக்கு ஆறறிவுள்ளதற்கு அடையாளமாம். அஃதின்றி நன்மையானவற்றிற்கு எதிரிடையானவைகளில் நாம் தலைப்படுவோமானல், நம்முள் கெட்டகுணங்களே வளரும். அப்பொழுது நமக்குப் பகுத்தறிவிருந்தும் யாது பயன்?

நாம் நன்ருக ஆலோசிப்போமாயின், மக்களுள் முற்றிலும் தீமையானவர்கள் வெகு அபூர்வமென்ற முடிவுக்கே வருவோம். தீயகுணமுள்வர்களிடத்தும் பல சமயங்களில் நற்குணம் காணப் படுகிறது. இதற்குக்காரணம்—அவர்கள் தம்மனச் சாட்சியின்படி அத்தருணங்களில் நடந்துகொள்வதேயாம். மனச்சாட்சியும், நற்குணமும் ஒன்றுக்கொன்று மணியும் ஓசையும்போல் ஒற்றுமையுடையன. கெட்டமனம் மனச்சாட்சியை விலக்கிவைத்து நம்மைக் கரடுமுரடான வழிகளில் நடாத்தித் துன்பத்தையும், பாவத்தை

யும் விளைவிக்கிறது. பேதைமையான இச்செயல், கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்யைத் தேடுகிறதுபோலவும், குணம் என்னும் இராஜபாதை நம்வசத்தேயிருக்கக் கல்லும் முள்ளும் நிறைந்த குறுக்குவழிகளிற் செல்லுவது போலவும் இருக்கிறது.

குணம் கற்பிக்கும் வண்ணம் செய்வது எளிது. அதன்படி நடப்பது அரிது. குணக்கேடாவது—பொய், புரட்டு, வஞ்சனை, மோசம், தூஷணை, கர்வம், பிடிவாதம், பொறாமை ஆகிய இன்னும் இவைபோன்றவைகளின் வசப்பட்டு அலைவது. துர்க்குணமுள்ளவர்கள் தாம் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் மிகவும் சிந்தனையுள்ளவர்களாக யிருக்கவேண்டியிருக்கிறது. முன்பின் சிறிது தவறுமானால் காரியம் கெடும். வழக்குத்தொடங்கும். ஓர் சமயம் அவர்கள் காரியம் சித்திபெறினும், பன்முறை ஏமாறவே நேரிடும். பூனை கண்ணை மூடிக்கொண்டு, "உலகெலாம் இருண்டு விட்டது தன்னைக் கண்டறிவார்யார்"? என்று நினைத்துப் பாலைக் குடித்தாலும் அது அகப்பட்டுக்கொண்டு அடிபடுகிறது. அதுபோலவேதான் தீயகுணமுடையவர்கள் தாங்கள் செய்யும் காரியங்களில் தீமையடைந்து துயருறுவர். குணம் நன்மையாயினும் அதனதனுக்கேற்ற பலன் சித்திக்கும். ஒவ்வொருவரும் தத்தம் குணங்கள் தம்மனச்சாட்சிக்கும், மற்றவர்களுடைய எண்ணத்திற்கும் மாறின்றித் தூய சிந்தையில் சன்மார்க்கவழியில் நடந்துகொள்வார்களெனில், கஷ்டமென்பதையே கண்டறியாதவர்களாகி நன்மைக்கு வழிகாட்டியாகவும் விளங்குவர்.

நற்குணம்—நல்ல செய்கைகளையும், நன்மையானவற்றையுமே நாடுகிறது. துர்க்குணத்திற்கு இல்லது கூறல், மாறுபாடு, வஞ்சித்தல், முதலானவை எவ்வாறு சம்பந்தமோ அவ்வாறே நற்குணத்திற்கு வாய்மை, அருள், பரோபகாரம், முதலியன சம்பந்தமுடையவை. ஒன்றை அனுசரித்தால் அதைச்சார்ந்த மற்றவைகளெல்லாம் தாமே வரும். சற்குணத்தை அணிகலனாகவுடையவன் எச்சமயத்தில் யார்க்கும் அஞ்சவேண்டுவதில்லை. அவன்தான் செய்வனவற்றை எவ்வாறு மறைத்துவைப்பதென்றும், அவற்றிற்கு ஏற்கும் எந்தெந்த சூழ்ச்சிகளைச் செய்வதென்றும், எங்ஙனம்

தீயதை நன்மையாகப் பிறர்க்குத் தோற்றுவிப்பதென்றும் கருத வேண்டியதில்லை. எண்ணியதை எண்ணியவண்ணம் பேசுவதும், செய்வதும் சன்மார்க்கனுடைய வழக்கம். நற்செய்திகளை மேற்கொண்டொழுகுபவன் காலக்கிரமத்தில் ஒழுக்கத்தால் உயர்ந்து, அன்பு, அருள்படைத்துப் பலர்க்குப் பயன்படுவனாகத் திகழ்வன். இதனால், இவன் உலகத்திலுதிக்கின்ற சூரிய சந்திரர்களைப்போல ஓர் அங்கமும் ஆகின்றான். பொறுமையினாலும், ஒழுக்கத்தாலும் ஒப்புயர்வற்று விளங்கிய பாண்டவரில் மூத்தோனாகிய 'தருமன்' இன்றும் உலகினரால் போற்றப்படுகின்றான். துராசையும், பொறாமையும் அகம்பாவமும் அதிகமாகக்கொண்ட துரியோதனன் தூற்றப்படுகின்றான்.

ஆகவே, நற்செயல்களும், நன்மையானவைகளுமே நற்குணத்தின் காரியங்களாக அமையும். அவைகள் பாவத்திற்கு எட்டாதன. எவனொருவன் பாவகிருத்தியங்களைத் தீயதென்று கருதி விலக்குகின்றானோ! அவன் இகத்திலும், பரத்திலும் புகழ்ந்து பாராட்டப் படுவான் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (திருக்குறள்)

வியாபாரிகளுக்கு வேண்டுகோள்.

உங்கள் விளம்பரம் ஒரு தின வர்த்தமானியில் பிரசுரிக்கப்படின், 60 நிமிஷமும், வாரப்பத்திரிகையில் ஒருவாரம் வரையிலுமே பயன்படும். மறுநிமிஷமே பலசரக்குமளிகைக்கும், பட்சணக்கடைக்கும் பறந்துவிடும். மாதப்பத்திரிகையில் அவ்வாறு போகா. குறைந்தது முப்பது நாட்கள் வரை நிலைப்பெற்றிருந்து பின்னர் 12 பத்திரிகைகளும் பைண்டு செய்யப்பட்டு புத்தகவடிவுபெற்றால் எக்காலத்தும் பிரயோஜனப்படும். ஆனதால், தாங்கள் தங்கள் விளம்பரங்களைப் பல்லாயிரம் சந்தாக்களையுடைய "நவமணி"க்கே அனுப்புங்கள்.

அவளது இறுதி உபாயம்.

(ஒரு சிறு கதை.)

(தென்ஆப்பிரிக்கா, டர்பன் சரஸ்வதி சபைத்தலைவர்
திரு. ச. முனிஸ்வாமிப் பிள்ளை அவர்கள் வரைவது.)

பசுபதிக்கு வயது இருபத்திரண்டு; கொஞ்சம் படித்தவன்; அவனது பிதா பெருத்த ஆஸ்திவந்தர். அவர் காலமடைந்து ஈராண்டாய்விட்டதால் பசுபதியே அச்செல்வத்திற்கு அதிபதி யானான். தந்தையின் காலத்திலேயே பசுபதிக்கு பத்மாசனி என் னும் ஓர் அழகிய சிறுமி வாழ்க்கைப்பட்டாள். அம்மணம், பசுபதி யேனும் அச்சிறுமியேனும் "வாழ்க்கைக் கணவனும் மனைவியும்" என்றவற்றின் பொருள் யாதெனச் சிறிதுமறியாது வாழ்ந்த பரு வத்தில் நடந்தேறியது. தங்கள் மணக்கொண்டாட்டத்தில் குதூ கலத்துடன் வழங்கிய ஆடலும், பாடலுமாகிய களியாட்டங்களே தம்வாழ்வென நினைத்தானந்தித்தனர் அவ்விருவரும்.

பசுபதியின் வாலிபப்பருவத்தில் அவனுக்குப் பல தோழர் ஏற்பட்டனர். அவர்களது சகவாசம் பசுபதியை ஓர் புதிய மனித னாக்கியது. இதுவரைக் கனவிலும் அறியா ஓர் நவீன உணர்ச்சி அவனிடம் உண்டாயது. அவ்வுணர்ச்சி ஒழுங்கற்ற இயற்கையை மீறிய மாமிச இச்சையாகிய மிருக இச்சையேயாகும். இப்புதிய இச்சையின் பலனாகப் பசுபதி விலைமகளொருத்தியுடன் நேசம்செய்விக்கப்பெற்றான்.

பசுபதியின் தாய் இன்னும் உயிர்த்துள்ளா ளாதலால், அவள் மனம் தன்குமாரனின் செய்கையைக் கண்டு மிக மிக மறுகியது. பெற்றமனம் பித்தாதலின், பசுபதியைத் திருத்த ஆசித்தனள். இனிய போதகங்களால் யாதும் பயனேற்படவில்லை. இறுதியில் மருமகளது வருகை நலம்பயக்குமென எண்ணினாள். அவனுக்குத் திருமணம் செய்விக்கத் தன் விருப்பத்தைக் கூறினாள். பசுபதி அப்போது ஓர் பெரிய ஞானிபோல், பெண்ணாசையினை முற்றுத் துறந்த மூதறிவினனைப்போல் தனக்குத் திருமணம் வேண்டாமென மறுத்தான். எனினும், அன்னையின் பல பிரார்த்தனைகளும், உப

தேசங்களும், அன்புததும்பிய கண்ணீரும் பசுபதியை இணங்கச் செய்ய, அந்தத்தில் தாயின் விருப்பமும் ஒருவாறு பூர்த்தியாயது. எனினுமென்ன? பத்மாசனியின் வருகை பசுபதியின் குணத்தை மாற்றிவிடவில்லை. உண்ணும் வேளைதவிரப் பாக்கிப்பொழுதை யெல்லாம் தன் (விலைமகள்) கண்ணாட்டிமனையிலேயே பசுபதி கழிக்கத் துவங்கிவிட்டான்.

பத்மாசனி—பசுபதியின் மனைவி, மிகுந்த புத்திசாலி. தமிழிலக்கியத்தில் போதிய ஞானமுடையவள். செய்ய விளந்தளிரொத்த மேனியையுடைய கட்டழகியே யாவள். நற்குண உருவம்படைத்த சுகுமாரியான அவள் தன் பதியின் உதாசீனத்தைக் கண்டு பெரிதுங் கவலையுற்றாள். அவள் தன் கொழுநனது வெறுக்கத்தக்க நடவடிக்கைகளைக் கண்டு மனம் வருந்தி அவனது உள்ளத்தினை மாற்ற எம்பெருமானை, எல்லாம் வல்லதென அவள் நம்பிய ஓர் தெய்வீக சக்தியை மன்றாடிப் பிரார்த்திப்பாளே யொழிய, அவற்றிற்காகத் தன் காதற்குரியவனை வெறுப்பதேனும், அவனுக்கியற்றும் தனது தொண்டுகளில் அவனது கருத்திற்கு, மனோவிருப்பத்திற்கு மாறாக நடப்பதேனும் அவளிடம் கிடையாது.

பத்மாசனி தன் கொழுநனது அகத்தினையடைந்தது முதல் தான் அவனிடம் பன்முறை பேசமுயன்றும், கணவனது மௌனம் அவளது முயற்சிகளை வியர்த்தமாக்கியது. பசுபதியின் தாயோ தன் புத்திரனின் முரண்டுத்தனத்தைக் கண்டு மனம் வெதும்பி அவனிடம் வெறுப்புற்று, பத்மாசனியையே தனது குமாரத்தியென நினைத்து நடந்து மகனை முற்றும் மறக்க முயன்றனள். அவளது வியாகூலம் தெய்வபக்தியாத் திரும்பியது. க்ஷேத்திர யாத்திரையில் தனது காலத்தைக் கழிக்க எண்ணி பசுபதியின் அன்னை வெளியேறிவிட்டாள்.

கணவன் தன்னுடன் பேசாவிடினும், தன்னுரைகட்குப் பதிலளிக்காவிடினும், அவனுக்கு அன்னம் பரிமாறும்போதும், அவனது பணிவிடைகளைச் செய்யும்போதும், மெல்ல மெல்ல இனிய வார்த்தைகளைப் பசுபதியிடம் உரைத்தாள் பத்மாசனி. தான் நவீன நாவல்களினின்றும் கற்ற நாத! பிரியபதி! பிராணகாந்தா! அன்பார்ந்த காதல! ஆருயிர்நேச! என்ற வார்த்தைகளை

எல்லாம் மீதியில்லாது பொழிந்து, கணவனைப் பலமுறையும் விளித்து இனிய மொழிகளைப் புகன்றாள். வரைவின் மகளைக் கைவிடுமாறு பலவிதமாய் மன்றாடினாள். பன்முறையும் வேண்டினாள். தனது காதலின் பெருமையை விளக்கமாகக் கூறினாள். "நாதா, நான் தங்கள்மிசை வைத்திருக்கும் பிரேமை, தாங்கள் அப்பொருட் பெண்டினிடம் வைத்திருக்கும் மாமிச இச்சையைப் போன்றதன்று; அல்லது அவள் தங்களிடம் நேசம்வைத்திருப்பது போற் பாசாங்குபுரியும் பண ஆவலினின்றும் பிறந்த போலி நட்புமன்று. என்னுடைய காதல் தெய்வீக வலியுடையது"...என்பது போன்ற வார்த்தைகளை வழங்கிக் கணவனது மனத்தினைத் திருப்ப முயன்றாள். ஒன்றும் பயன்பெறவில்லை. பத்மாசனிக்கு இறுதியாக ஓர் உபாயம் தோன்றியது.

ஓர் நாள் இரவு பத்துமணி இருக்கலாம். தாசியின் மனையினின்றும் வீட்டினை நோக்கிப் பசுபதிவரும் நேரமிதுதான். பசுபதி இல்லத்தினை அடைந்த பொழுது வழக்கப்படி அவனை எதிர் பார்த்து நிற்கவேண்டிய பத்மாசனி அன்றுதினம் அவ்வளவு ஆவலுடன் வரவுநோக்கி நின்றனளில்லையென அவன் மனத்துட் டோன்றியது. அது உண்மைதான். பசுபதி மௌனமாக உட்புகுந்தான்; அவனது மனைக்கிழத்தியும், வழக்கம்போல் இனிய வார்த்தைகளின்றி மௌனமாக அவனை வரவேற்றாள். பசுபதியின் உள்ளத்தில் வாக்கால் விவரிக்கமுடியாத ஓர்வித உணர்ச்சி உதித்தது. தனதில்லாளின் உதாசீனத்தின் காரணம் யாதென்பதை யறிய அவனது மனம் நாடியது. துடிப்புற்றது. "இருக்கட்டும்; முற்றும் கவனிப்போம்." என்று பேசாமலிருந்தனன்.

பசுபதி உணவுதவிக்கொள்ள உட்புகுந்தபொழுது ஆண்டு இருபோஜன பர்ணங்கள் இடப்பெற்றிருந்தன; ஒன்றின் முன்னர் தான் மெல்லென அமர்ந்தான். இன்னொன்று யாருக்கு? என்று அவன் மனம் தன்னைத் தானே ஆச்சரியத்துடன் வினவியது. பசுபதியின் ஆகாரபாத்திரத்தில் உணவுமுற்றிலும் வட்டிக்கப் பட்டிருந்தது. அவ்விதமே மற்றொன்றிலும் பத்மாஸனி உண்டியை இட்டனள். பசுபதி உண்ண ஆரம்பித்ததும், அதிகப்படியான

இலையருகே பத்மாசனி உட்கார்ந்து அன்னமருந்தலானாள். பசுபதிக்குத் தன் மனையாளின் இந்த நவீனச்செய்கைப் பொருள் சிறிதும் விளங்கவில்லை. அது அவனுக்கோர் அதிசயமாகவே யிருந்தது. போஜனம் முடிந்ததும் பத்மாசனி கணவனுக்குத் தாம்பூலம் அளிக்கும் போழ்தே தானும் அதனைத் தரித்துக்கொண்டாள். பசுபதி மனைவியின் இப்புதிய நடவடிக்கைகளா லேற்பட்ட மனக் குழப்பம் சிறிது மாருதவனுகவே கையில் ஓர் வெளிச்சம் கொடுக்கும் கருவியை எடுத்துக்கொண்டு வாயிற்புறத்தை யடைந்தான். அவன் பின்னாலேயே பத்மாசனியும் வாயிலினையருகி மனையின் முன்புறக் கதவினைத் தாழிட்டுப் பூட்டிவிட்டாள். பசுபதியின் மனக்குழப்பம் பின்னும் அதிகமாயது. எனினும், கால்கள் தள்ளாட, அதிசய உள்ள நிகழ்ச்சிகள் உறுத்த, வாய்பேசாமலே மெல்ல மெல்லத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே கிழக்குநோக்கி நடக்கலானான். பத்மாசனியோ மந்தகாசத்துடன் மேற்குத்திசையை நோக்கிப் பையச் செல்லலானாள். பசுபதியின் மனச்சுழற்சி மிக மிக அதிகரித்து: அவனது இருதயம் படபடத்து; தன் மனையாட்டியின் இவ்வதிசய நடத்தையின் அர்த்தத்தினை யறியாவிடின், இருதயம் வெடித்திடும்போல் அவனுக்குத் தோன்றியது. அவன் திரும்பி ஒரே பாய்ச்சலாய்த் தன் மனைவியின் முன்போய் நின்று, "பத்மாசனி! இப்பொழுது நீ எங்கு செல்கிறாய்"? என்றான். அதற்குப் பத்மாசனி "நாதா! இந்தத் துக்கஉடலை போக்கிக் கொள்ளவே போகிறேன்." என்றாள். மனந்திரும்பிய பசுபதி "கண்ணே! நீ இப்படியுஞ் செய்பலாமா" என்று அவளை நெருங்கி அணைத்து இதழோடு இதழ் பொருத்தினான். அவளது இறுதி உபாயம் வெற்றியைத் தந்தது.

உங்கள் வியாபாரம் விருத்தியாக வேண்டுமானால், பல ஆயிரம் சந்தாக்களை யுடைய 'நவமணி'யில் விளம்பரம் செய்ய முந்துங்கள்.

கம்பராமாயணக் கதிர்மணிக்கோவை.

3. இராமாயணத்தின் நடை

நாரணன் நவில்வது.

(99-ஆம் பக்கத்தொடர்ச்சி)

எழுதும் பொருளைப்பற்றிச் செம்மையாக விளக்கினால் அந்த நடை வெற்றியடைந்த நடையென்று "ஹஸலிட்" (Haglitt) என்னும் ஆங்கிலக்கவிஞர் மொழிந்திருக்கிறார். அதனைக் கவனிக்கும் போது கம்பர் நடை வெற்றிபெற்ற சிறந்த நடையென்றே சொல்ல வேண்டும்.

எளிய நடையும், பெருமிதமும் கம்பரிடம் இயல்பாக அமைந் துள்ளன. வீணைக்குரிய பண்ணமைந்த கவிகளைப் புனைவதில் திறமைவாய்ந்த கவிஞர் கம்பர். சிறப்பான கட்டங்களில் தெளிவும், இனிமையும், சிறப்பும் அமைய ஆக்கப்பட்டிருக்கும் அவர் நடை அற்புதமும், அழகும் விளங்கக்கூடியதாயிருக்கின்றன. இராகத் தையும், ரூபத்தையும் "சாஸரைப்" (Chaueer) போல அலங் கரித்திருக்கின்றனர். தமிழ்க்காவியம் புனையும் திறமையில் கம்பர், ஆங்கிலக்கவியின் தந்தையைப்போலச் சிறந்தவர். சுருங்கக்கூறின், கம்பராமாயண நடையைப்போல் சிறப்பாகவும், ஒப்பற்றதாகவும் வேறெந்த நூலிலும் காண்பதருமை யென்றே சொல்லலாம்.

தமிழ்க்காவியங்களில் ஜீவக சிந்தாமணியையும், கந்தபுராணத் தையும், கம்பராமாயணத்திற்கு ஒப்பிடலாம். ஆயின், அவைகளை விடக் குறைவில்லாத எண்ணங்கள் அமைந்து சிறந்து காண்பது கம்பராமாயணமெனக் கூறுவது மிகையாகா. பூ, பழம், இளமை, அன்பு, அழகு, விளையாட்டு, உற்சவம், களிப்பு, முதலி பொருள் களின் அருமைகளைக் கம்பர் அவற்றின் தகுதிக்கேற்ப நன்கு விவரித்திருக்கின்றனர். இயற்கையின் இனிய காட்சிகளை விவரிப்ப தில் முழுத்திறமைவாய்ந்தவர். கண்களால் கண்டு, எண்ணங்களை அறிவதில் கம்பர் மிகச் சமர்த்துடையவர்.

இராகம் செயற்கையல்ல; இயற்கை. ரூபத்திற்கும் விஷயத்

திற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. அழகாகவும், பூர்ணமுடிவாக வும் கவிபாடும் சக்தி கவிஞர்க்குச் சொந்தம். வீணையில் அமைக்கப் பட்டுள்ள தந்திகளில் அதனதனுடைய ஸ்வரஸ்தானங்களைத் தடவி நாதமெழுப்புவது போலத் தமிழ்ச் செய்யுட்களின் சந்த வகைகளைத் தழுவி ஓசையின்பம் தவழும் இனிய செய்யுட்களை இசைப்பதில் கம்பர் கைதேர்ந்தவர். சில சமயங்களில் கம்பர் காவிய நடை ஆற்றொழுக்காயிருந்தபோதிலும், உருவத்தையும், அழகை யும் நாம் கண்டு மகிழும்படி அவர் அமைத்திருக்கும் வனப்பு பாராட்டற்குரியதே.

இராமாயணச் செய்யுட்களின் வரிகள் ஆழ்ந்த கருத்தும் அமைந்த சொல்லும், இனிய சுவையும், எழுந்த சிறப்பும் கொண் டன. காவியத்தில் பயிலப்படுகிற சுவைமலிந்த தீந்தமிழின் அமிழ்தமயமான ஜீவநதி, ஆழமாயும், தெளிவாயும், மிருதுவாயு மிருப்பதுடன் உற்சாகத்தையும் ஓங்கச்செய்கின்றது.

கம்பர், கலைக்கு வேண்டப்படுகிற உபாயங்கள் ஒன்றையும் விடாது உபயோகித்து அச்சூழ்ச்சிகளில் தலைசிறந்து விளங்கு கின்றனரே யன்றி, கலையிடுகிற கட்டளைக்குக் கீழ்ப்படிகின்றவ ராயில்லை.

அழகும், வியப்புந் துலங்குகின்ற தமது சொந்தக் கற்பனை யைக் காவியத்தில் காண்பிப்பதும், ஆழ்ந்த கருத்தும், மதிப்பும் வாய்ந்த சம்பாஷணைகளை மொழிவதில் கவனமும் கொண்டவர் கம்பர். அவருடைய கவிவரிகள் இனிமையான இராகத்தைக் கொண்டிருப்பதில் பெயர் பெற்றவை.

கவியின் எல்லையை அதிகப்படுத்தித் தத்துவ சாஸ்திரங்களை யும் தமது இராமாயணத்தில் அடங்கும்படி செய்யும் வல்லமை கவியரசராகிய கம்பருக்கு அமைந்த சிறப்பு அதிசயம்!

ஆன்ம தத்துவஞான எண்ணத்துடன் "சடகோபரந்தாதி" யின் நடைபோல மிகவும் வியந்து கூறும்படி பல அருமைக் கவி களைப் புனைந்து பாடுவதில் கம்பர் மிக வல்லவர். சுருங்கக் கூற மிடத்து மேன்மை, அழகு, தெளிவு, பலம், சுருகச் சொல்லல், விளங்கவைத்தல், ஆழ்ந்த கருத்துகள் முதலியன கற்று ஆராய்

ந்து தெளிந்த கவியொருவர்க்கு அமையவேண்டிய இன்றியமை யாத குணங்களெல்லாம் ஒருங்கே கம்பருக்கும் அமைந்து அவை கவி நடையில் திகழ்ந்து சிறந்து காண்கின்றன.

(4) புலமை அல்லது பாண்டித்யம்.

கம்பர் கவியில் வெற்றிபெற்றதற்கு அவருடைய ஆழமான கல்வியே காரணமெனலாம். தமிழ்கற்ற கவிவல்லோரில் கம்பர் மிகச் சிறந்தவர். பழமையான தமிழ்க் காவியங்களிற் காணும் சொற்கள் பதங்கள், எண்ணங்கள், முதலியன கம்பராமாயணத்தில் அடங்கி யிருக்கின்றன. அப்பழங்காவியங்களில் வருகிற 'நேவோர்' 'ஏமுறல்' 'ஐயவி' 'ஆறழல்' 'வாலுளைப்புரவி' 'வேழமுத்து' 'முத்தி வித்து,' 'கங்கைவார் சடைக்கற்றையன்,' முதலிய பதங்கள் கம்பரால் தகுதியாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறள் பத்துப்பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை, சூளாமணி, வளையாபதி, மலைபடுகடாம், குறிஞ்சிப்பாட்டு, தேவாரம் முதலிய நூல்களைக் கம்பர் மிகுதியாகப் பயின்றிருப்பதும், அப்பயிற்சியின் மொழிகளும், பதங்களும், தமது காவியமாகிய இராமாயணத்தில் பிரயோசிக்கப்பட்டிருப்பதும், கம்பரது ஆழ்ந்த கல்வியையும், தேர்ந்த புலமையையும் நன்கு காட்டு கின்றன.

சத்திமுற்றப் புலவர்.

பாண்டியன் ஐயந்தெளியக் கவிபாடி வறுமைநீங்கிய வரலாறு.

இப்புலவர் கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் சுமார் நான்குமைல் தூரத்திலுள்ளதும், திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்குச் சிவபெருமான் முத்துப்பந்தர் அளித்ததுமான 'திருச்சத்திமுற்ற'த்தைப் பிறப்பிடமாகக்கொண்டவர். இப்பாவலர் இயற் பெயர் இன்னதென அறியக்கூடவில்லை. இவர் செம்பாகமான செஞ்சொற்கவிகளைத்திறம்பெறப்பாடும் ஆற்றலும், கண்ட சுத்தி பாடும் வன்மையும், மிகப்படைத்து கலைமகளார் பேரன்பிற்குரியராய் இருந்தாரெனினும், வறுமைப்பிணியால் மெத்தவும் நொந்து சித்தம்கலங்கியிருந்தனர். நல்லோர் நீடியகாலம் துன்பத்திலாழ்வது பதிவில்லையானதால் இவர்க்குத் திடீரென நினைவொன்று

மனதி லெழுந்தது. அது-'ஆலவாய்ப் பெருமானுக் கன்பனுய்த் தமிழ்கேட்டுருகும் சிந்தையனுய், தம்மனங்களிக்கப் பாடும் புலவர் வறுமையை அறவே அகற்றும் ஈகையாளனுய்ச் சிறந்த பாண்டியன் ஒருவன் இலங்குகின்றுனென்று பல்லோரால் சொல்லக் கேட்டுத் தாமும் அங்குச்சென்று அவனைப்பாடித் தம்மை வருத்தும் கொடிய தரித்திரத்தைத் துரத்தவேண்டுமென்ற எண்ணம்.' அவ்வெண்ணத்துடன் புலவர் மதுரைமாநகரைச்சென்றடைந்தனர். அப்போது மாலைக்காலம் நெருங்கும்சமயமாயிருந்ததனுலும்,அரண்மனையுட் சென்று அரசனைக் காணும் வரிசையற்றுத் தரித்திர கோலத்தோடிருந்ததனுலும், பாராச் சேவகர் புலவரை அரசனைக் காண அரண்மனையினுள்ளே விடமறுத்தனர். அதனுல் புலவர் மேலும் நொந்து ஊரின் கண்ணுள்ள 'அம்பலத்தில்' சென்று தரையே பாயாகவும், கையே தலையணையாகவும் வைத்துச் சயனித்துக்கொண்டிருக்கையில், 'நாரை' யொன்று தமது தலைக்குமேல் பறந்து கத்திக்கொண்டு சென்றது. அச்சத்தத்தைக்கேட்டுப் புலவர், தமது நிலைமையைத் தமது மனைவிக்கு அறிவிக்குமாறெண்ணி அந்நாரையை நோக்கி அடியில்வரும் கவியை அழகாகச் சித்தரித்துக் கூறினர். அக்கவி:—

அகவல்

"நாராய் நாராய் செங்கா லுராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா லுராய்
நீயு நின் பெடையுந்
தென்றிசைக் குமரியாடி வடதிசைக்
காவிரியாட வேகுவி ராயின்,
சத்தி முற்றத்து வாவியிற் சென்று
நனைசுவர்க் கூரை யரிகுரற் பல்லி
வரவுபார்த் திருக்கு மனைவியைக் கண்டெங்
கோமான் வழுதிகூடன் மன்றத்
தாடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலுறத் தழீஇ
அலகு திறந்த பல்லினனுகிப்

பேழைசெய் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டன மெனுமே"

(தமிழ்நாவலர் சரிதை)

இவ்வருங் கவியை நகர்சோதனையின் பொருட்டு மாறுவேடத்துடன் சென்றுகொண்டிருந்த பாண்டியன் கேட்டு, நீண்டநாளாக நாரையின் மூக்குக்கு உவமை தேடியும் அறியாது தவித்துக் கொண்டிருந்த தனக்கு இன்று அது கிடைத்ததற்கு மிகுதியும் களிப்புற்று, தனது ஐயந்தெளியப் பாடிய தமிழ்ப் புலவருக்குத் தகுதியான பரிசளிக்கவேண்டுமென மனதினுட்கொண்டு, தான் மேலே போர்த்துக்கொண்டிருந்த பொற் சரிகைப் போர்வையை அப்புலவன் மீது போர்த்து விட்டு அரண்மனை சேர்ந்தான்.

புலவர், கால்நடையின் களைப்பாலும் பசியின் பிணியாலும், வாடையின் மிகுதியாலும் மிகவும் அயர்ந்திருந்தனர். அப்போது எதிர்பாராது தம்மீது போர்க்கப்பட்ட பட்டாடை நித்திரைக்கு உதவியாயிருந்ததனால் பொழுது புலர்ந்ததையும் அறியாது உறங்கினர். அரண்மனைசேர்ந்த பாண்டியன் விடிந்ததும் எழுந்து தனது பணியாளர் சிலரை விளித்து ஊர் அம்பலத்தில் புதிதாய்வந்துள்ள புலவரை அழைத்து வருமாறு செய்து, அவரின் எளிய நிலையை நன்கறிந்து அவரை அரண்மனையில் வைத்து நன்றாகப்போஷிக்கும்படி கட்டளையிட்டு, புலர் அறியாதவாறு அவர் பிறப்பகத்தையும் புதியமாளிகையாக்குவித்து அதில் பொன்னும், பொருளும், பொன் பட்டாடைகளும், பொலியுமாறு நிறைத்து,பின் புலவர்க்கு வரிசையளித்துப் போகவிடுத்தான்.

பரிசுபெற்ற புலவர் சத்திமுற்றம் சென்று தமது வீடு தெரியாது திகைத்தபோது அவர் மனைவி வெளியில்வந்து தனது கணவனிடம் பாண்டியன் ஏவுதலால் சகல சம்பத்தும் உண்டானதென்று கூறி தமது மாளிகையினுள் அழைத்துச் சென்றாள். புலவர் உள்ளே நுழைந்து காண்டற்கரிய சம்பத்துகள் அனைத்தையும் கண்டதிசயித்துப் பாண்டியனது அளப்பரிய அபிமானத்திற்கு மெத்த மகிழ்ந்து அவனை பெரிதும் பாராட்டி இனிது வாழ்ந்திருந்தனர்.

இவ்வரலாறு உண்மையென்பது "சோழமண்டல சதகத்" தாலும் உறுதியாகின்றது. அப்பாடல் அடியில்வருமாறு:—

"தினையுங் கழற்காற் சிலம்பலம்ப நின்ற பெருமா னிலைபாடிப்
பனையின்கிழங்குபிளந்தன்ன பவளக்கூர் வாய்நாரையென்றே
புனையு முதனூற் சத்திமுற்றப் புலவனமுது புசித்தூற
வினையுமதுரத் தமிழ்வாடை மணக்குஞ் சோழமண்டலமே"

கோவை கிழான்.

கனகவல்லி

அல்லது

கள்வர்கவர்ந்த கன்னிகை.

கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்
அவர்கள் எழுதியது.

ருத்திரம்மதேவியின் வரலாறு.

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்."

(புறநானூறு)

(234-ம் பக்கத் தொடர்ச்சி.)

நீர்சூழ்ந்த இந்நிலவுலகில் பல பெண்மணிகள் வேறு வேறு காலங்களில் வேறு வேறு தேசங்களில் தோன்றி ஆங்காங்கு தங்கள் பொன்றாப் புகழையும், குன்றாப் பெருமையையும் நிலை நாட்டியிருக்கின்றனர். அவர்களுள் சிலர், அரசர்க்குரிய செங்கோலேந்தி அரியாசனத்தமர்ந்து ஆண்மக்களினும் வீறுடையராய் நீதிசெலுத்திக் குடிகளைப் பரிபாலித்தும், சிலர் பரோபகாரத்தால் பெயர் சிறந்தும், வேறு சிலர் கல்வி, நல்லொழுக்கம், தேசாபிமானங்களால் பிரசித்திபெற்றும் வாழ்ந்து வந்தார்கள். ஒருவரிடம் நல்லகுணங்கள் பிறர் நன்கு மதிக்குமாறு விளங்குமாயின், அவற்றையே மக்கள் புகழ்ந்து கொண்டாடுவார்கள். அதனால் அவர்களுடைய கீர்த்தி எங்கும் பரவிப் பிரகாசிக்கும்.

இராஜ பெருமாட்டியாகிய ருத்திரம்மதேவி புகழ்தற்குரிய பல்வகை உயர்குணங்களில் மிகச் சிறந்தவள். ஆந்திரதேசத்தினுள்ள ஓரங்கல்நாட்டை அரசுசெய்த காகதீய கணபதிகளின் அரச வமிசத்தைச் சார்ந்தவள். இவளுடைய பெயரை ஆந்திர நாட்டில் அறியாதவர்கள் இராரென்றே துணிந்து கூறலாம். இவள் பெருவீரனும், அரசகேசரியுமாகிப் புகழ்பெற்று விளங்கிய கணபதி

தேவனுக்குக் குலம்விளங்கத் தோன்றிய ஸ்ரீரத்னம். இவ்வருமக ளாகிய தவமகள் ஒருவளே தனக்கு உதித்ததனல் அத்திருமக ளுக்கு 'ருத்திரம்மதேவி' என நாமகரணஞ் சூட்டிச் சீராட்டிப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்துவந்தான். பெண்ணும் நாளொரு மேனி பொழுதொருவண்ணமாக வளர்ந்து பெருகி மங்கைப் பருவமடைந்தாள். ஆண்சந்ததியற்ற கணபதிதேவன் தனது வமிசபரம்பரை வழக்கப்படி பிறகுடும்பத்திற் பிறந்த ஆண்பிள்ளை யைச் சுவீகாரம் செய்துகொள்ளாமல், வீரமும், விநயமும், ஆண்மையும், அழகும், அதனுடன் தேறிய கல்வியும் சிறந்த தனது குமார்த்தியையே தனக்குப்பின் ஓரங்கல்நாட்டின் அரசியாகச் சிங்காதனத்தின் மீதேற்றி திருமுடிபுனைவித்து செங்கோலை அவள் திருக்கரத்தீந்து தான் விண்ணுலகடைந்தான். ருத்திரம்மதேவி யும் அரசுக்குரிய பல அமிசங்களிலும், நுண்ணறிவு வாய்ந்த வளாய் விளங்கினமையால் தந்தை யளித்த ராஜபதவியைக் கைக் கொண்டு கி. பி. 1290-ஆம் ஆண்டு முதல், கி. பி. 1323-ஆம் ஆண்டுவரை வெகுநீதியும், திறமையும், சமர்த்தும் விளங்க ஆடவரி னும் சிறந்த ராஜதந்திரத்துடன் தேசத்தை நன்ருக ஆட்சிபுரிந்து வந்தாள். தான் கொலுக்கூடத்திற்கு எழுந்தருளும்போதெல்லாம் ஆண்வேடம் புனைந்து சிங்காதனத்தமர்ந்து தேசவிசாரணை செய் தும், வழக்கு விசாரித்தும், நேர்மைகுன்ருமல் நீதிசெலுத்திவந் தாள். இவளது நல்லரசாட்சியில் குடிகளுக்கு யாதோர் இன்னலு மின்றி குறையென்பதை அறியாராய் குதூகலத்துடன் வாழ்ந்து வந்தனர். பல்வளங்களும் பல்கிப் பெருகி நாடு சுபிட்சமாயிருந் தது. ருத்திரம்மதேவி மரபுவிளங்கத் தோன்றிய குலமகளான தால் பிறந்தகுலத்திற்குப் பேரும் பிரதிஷ்டையும் பெருக்கினுள். பகையரசர்கள் இவள் பெயரைக்கேட்டால் நெஞ்சம்பதறி அஞ்சி யொடுங்குவார்கள். இவள் பெண்பிள்ளை தானே என்று அலட்சிய மாகக் கருதிய சில ராஜத்துரோகிகள், துஷ்டர்களையும், சதியா லோசனைக்காரர்களையும், கள்வர்களையும் சேர்த்துக்கொண்டு உள் நாட்டில் கலவரஞ்செய்யத் தொடங்கினுர்கள். அஃதுணர்ந்த இராணி ருத்திரம்மதேவி மகிடாசுர மர்த்தனியைப்போல் வீறு கொண்டெழுந்து தன்பலம், தர்மபலம், சேனுபலம், ஆயுதபலம், மந்திரபலம், தந்திரபலம் ஆகிய பல பலங்களின் பெருந்துணை

கொண்டு தேசவிரோதிகளாகிய அத்துஷ்டர்களைச் சிறைப்பிடித்துத் தக்கபடி தண்டித்தாள். வீரமாதாகிய ருத்திரம்மதேவி ஓரங்கல் சிம்மாசனத்தமர்ந்து நாட்டை பரிபாலியாதிருக்கும் பட்சத்தில் ஆந்திரமக்கள் அழிந்தேபோயிருப்பர். அல்லாமல், ஆந்திரநாட்டுப் பெண்மணிகள் கூடப் புருஷர்களைப் போலவே யானையேற்றம், குதிரைசவாரி, வில்வித்தை வாட்பயிற்சி முதலிய அரசவித்தைகளைக் கற்று ராஜ்யபரிபாலனம் புரிந்தார்கள் என்ற கீர்த்தியும் லோகத்தில் பரவாமலே சென்றிருக்கும். அதுமட்டுமா? ஆந்திர தேச மாத்ருகர்ப்பத்தில் விலைமதித்தற்கரிய புருஷரத்தினங்கள் இருப்பது போலவே அபூர்வமான ஸ்திரீரத்னங்களுங்கூட இருக்கின்றார்களென்றும், அவகாசமிருந்து அவைகள் சாணைபிடிக்கப் படுமாயின், அவற்றின் பேரொளி பிரபஞ்சத்தில் பிரபலப்பட்டிருக்கும் என்ற விஷயமும் வெளிப்படாமலே போயிருக்கும். அக்குறைகளுக்கிடமின்றிச் செய்த ருத்திரம்மதேவியின் பெருமையும், பிரதாபமும்! போற்றற்குரியதே.

இவ்விராணியார்க்கு 'சிவதே வையா' என்ற அந்தணர் முதன் மந்திரியாகவும், போர்புரிவதில் பெருவீரனான 'கங்கைய ரெட்டி' தலைமைத் தண்ட நாயனாகவும் இருந்தார்களென்ப. இவ்வளவே இவ்வரசியைப்பற்றிய நாமறிந்த வரலாறு. இனிக்கூறத் தொடங்குவது பிரதாபருத்திரனது வரலாறு. பெருவீரனாகிய அவனது வரலாறு உங்களுக்குப் பெருமகிழ்ச்சியைத் தரும்.

II-ஆம் பிரதாபருத்திரன் வரலாறு.

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்." (திருக்குறள்)

இத்தகைய நீதிலாச் செல்வி ருத்திரம்மதேவியின் திருவயிற்றிலுங்கூடத் தனது தந்தை கணபதிதேவனைப் போலவே ஆண்சந்ததியின்றி இருபெண்மணிகளே பிறந்தனர். பட்டமகிஷியாகிய ருத்திரம்மதேவிக்குப் பிறந்த பெண்மக்களில் மூத்தவள் பெயர் "உக்கம்மதேவி" இளையவள் பெயர் தெரியவில்லை. திருவுடைச் செல்வி உக்கம்மதேவியை அப்போது தாரணிக்கோட்டையை அரசுசெய்துவந்த "கோட்டைப் பெத்தராஜன்" என்னும் அரசனுக்குருத்திரம்மதேவியால்மணஞ்செய்துகொடுக்கப்பட்டது. பெத்தராஜன் ஜயினமதஸ்தனாயிருந்தும் தமது மதவிரோதியான

அவனுக்குத் தனது அருமைப் புதல்வியைக் கொடுக்கத் துணிந்தது, அவனது அகன்ற அரசியல் ஞானத்திற்கும், நீதிகுன்றாத நேர்மைக்கும், ஒப்பற்ற யுத்தபராக்கிரமத்திற்குமேயாம். இங்ஙனம் திருமணம் முடிந்த இராஜதம்பதிகளுக்கு உலகம் ஒருங்கே புகழ்ந்து போற்றத்தக்க இரண்டாம் பிரதாபருத்திரன் செஞ்ஞாயிறுபோற் றோன்றினன். அங்ஙனந்தோன்றிய அரும்புதல்வனைக் கண்டு ருத்திரம்மதேவி பேரானந்தப் பெருங்கடலுள் ஆழ்ந்தித் தனது குலம்விளங்கப் பிறந்த குழவிக்குத் தொப்புளறுத்து ஸ்நானஞ்செய்வித்து செய்யும் சடங்குகளனைத்தும் செம்மைபெறச் செய்து ஈரம்புலர்த்திக் குழந்தையைக் கவனித்தனள். அப்பொழுது அப்பாலனது பரந்த நெற்றியும், நீண்டு அகன்ற கண்களும், திரண்ட கழுத்தும் எடுத்த விசாலமானமார்பும், பருத்துத்திரண்டுயர்ந்த தோள்களும், திரண்டுருண்டு முழந்தாளளவும் நீண்டகைகளும், பாம்பின் படம்போற் பரந்த முதுகும், சிங்கத்தின் இடைபோன்ற இடையும், சங்கம், சக்கரம், கதை, வாள், வில் முதலிய ரேகைகளுள்ள அகங்கையும், இவ்வித ரேகைகளுடன் துவஜம், குடைகளுங் கூடிய உள்ளங்காலும், இன்னும் விரித்தற்கரிய உத்தம புருஷலட்சணங்களும் மின்னிப் பிரகாசிப்பதைக் கண்டு வெகுவாக வியந்து மகிழ்ந்து அப்பசுங்குழவியைக் கணபதிதேவன் முதலான பேரரசர்கள் வீற்றிருந்து அரிய நீதி செலுத்திய ஓரங்கல் அரியாசனத்தின் மீது கிடத்தி ஒரு நாழிகை பொறுத்து எடுத்துப் பிரசவவீட்டிலுள்ள தாயினிடத்துச் சேர்த்தனள். அன்று ஓரங்கலிலும் அதன் சுற்றுப்பிரதேசங்களிலும் நிகழ்ந்த மகோற்சவங்களையும், களியாட்டங்களையும், தானதருமங்களையும், வருணிப்பது அசாத்தியம். கணபதிதேவனுக்குப் பின்னர் காகதீய வமிசத்தில் ஆண்சந்ததி பிரதாபருத்திரனே யான்தால், அரசகுடும்பத்தினரும், சுற்றத்தாரும், அமைச்சர்களும், நாட்டுமக்களும் அகமிக மகிழ்ந்து அத்தவமகனை:—

> "திங்களி னிளங்குழவி செம்ம லிவ னென்றுஞ்
> செய்யபரி திக்குழவி யையனிவ னென்றுந்
> தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமுந்
> தனித்தனி யுவப்பதோர் தவப்பயனு மொத்தே"

(தொடரும்.) (கலிங்கத்துப்பரணி)

செய்தித் திரட்டு.

பள்ளத்தூர்.

காலநிலை. வெயிலின் கொடுமையதிகம். இடையிடையே வானங் கருத்து நல்ல மொழி பொழிந்ததால் உஷ்ணம் ஒருவாறு அடங்கியிருக்கிறது. தருணமறிந்து பருவ மழை பெய்ததால் நீர் நிலயங்களில் ஜலம் பெருகி ஸ்நானபானங்களுக்குச் சவுகரியமாயிருக்கிறது. இரவில் புழுக்கமாயிருப்பினும், பனிபெய்து குளிர்ச்சியைத் தருகின்றது.

பதினெட்டாம் பெருக்குவிழா.

ஆடிமாதம் பதினெட்டாம் பெருக்கத்திற்கு சிவன்கோவிலுக்குக் கிழக்கிலுள்ள பழையவூர் திண்ணைப்பள்ளிக்கூடச் சிறுவர்கள் எடுதூக்கிக் கலைமகள் தோத்திரமும், பிள்ளையார் சிந்தனையையும் உறக்க ஒருசேரப் பாடியவண்ணம் தெருக்களில் சிறு தேர் இழுத்துக்கொண்டு ஊர்வலம் வந்தது வேடிக்கையாகவிருந்தது. இச்சம்பிரதாயம் இக்கால ஆங்கிலப் பள்ளிகளில் அறவே யொழிந்திருப்பினும், கிராமத்திண்ணைப் பள்ளிகளில் பண்டைக்கால சம்பிரதாயத்தைக் கைவிடாது கொண்டாடி வருவது போற்றுதற்குரியதே. இச்சிறுவிழா சிறுவர்கட்கு உற்சாகத்தையும், களிப்பையும், ஊரில் நோன்பின் நினைவையும் உண்டாக்கியது கவனிக்கத்தக்கது.

வருகை.

12—8—31. தேதி மாலை இவ்வூர் போலீஸ் ஸ்டேஷனை இன்ஸ்பெக்ஷன் செய்வதற்காகச்சென்னை மாகாணப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனரல் மிஸ்டர் கன்னிங்காம் துரையவர்கள் விஜயம்செய்திருந்தனர். அவரை உள்ளூர் போலீஸ் அதிகாரிகள் எதிர்கொண்டழைத்து உபசரித்தனர். போலீஸ் ஸ்டேஷன் அலங்கரித்து வர்ணமிடப்பட்டிருந்தது.

கும்பாபிஷேகம்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் அதிகாரத்திற்குரிய சிவாலயங்களுள் பள்ளத்தூர் சிவாலயமும் ஒன்று. இவ்வூரில் ஆலயங்கொண்டருளும் ஸ்ரீமீனம்பிகை சமேத சொக்கநாதப்பெருமானுக்கு ஆவணிமாதம் 10-தேதி புதன்கிழமை (26—8—31.) திருவோண நட்சத்திரம் காலை ௰௨ஜ-க்கு மேல் ௰௫-நாழிகைக்குள் விருச்சிக லக்கினத்தில் அஷ்ட பந்தன கும்பாபிஷேகம் நகரத்து வணிகப் பிரபுக்களால் நடாத்த நிச்சயிக்கப்பட்டுப் பூர்வாங்கமான காரியங்கள் தொடங்கி நிகழ்ந்து கொண்டுவருகின்றன. 17 ஆண்டுகட்கு முன் நிகழ்ந்த கும்பாபிஷேகத்தில் கெட்டிக்கப்பட்ட மருந்த தளர்ந்து முகூர்த்தம் அசையும் காரணத்தால் அதனைப் பண்டுபோலவே கெட்டிப்படுத்துவதற்கே இது செய்வதால் அதிக விமரிசையின்றி குறைந்த செலவிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இச்சுருங்கிய செலவுப்பட்டியுள், நெடுங்குளத்திலிருந்து பிரத்தியேகமாக வரவழைக்கப்படும் பெரியமேளச் செலவும் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

Regd. No. M. 2646.

தாதுபுஷ்டிக்கி சரப லேகியம்.

இது மகா அருமையான மூலிகைகளாலும் விலையுயர்ந்த வித்துமுதலிய சரக்குகளாலும் தயார்செய்யப்பட்ட பெரிய முறை லேகியம். இதுவரை ஒருவராலும் செய்துமுடிக்காதது. இரத்தக் குறைவால் ஏற்படும் சகல கொடிய வியாதிகளையும் நிவர்த்திக்க வல்லமையுடையது. தாதுபுஷ்டிக்கி நிகரற்றது. அபார மகிமை பொருந்தியது. பலத்தில் சிறந்த மருந்து இதைவிட வேறொன்றில்லை யென்பது உறுதி. பலத்தில் யானைதான் முதன்மையுடையது என்பது உலகமறிந்த விஷயம். அப்பேர்பட்ட யானையை வெல்லக்கூடியது. சிங்கம். சிங்கத்தையும் வெல்வது சரபம். ஆயின், சரபலேகியத்தை ஜெயிப்பதற்கு இப்புவியில் எதுவுமே இல்லை என்பது உறுதி. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய லேகியம்	ரூ. 5—0—0
½ மண்டலம் உபயோகிக்கக்கூடிய லேகியம்	ரூ. 2-12-0

அயல்நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.
வி. பி. வேறு.

P. S. ராமய்யா
பழனி பங்கஜம் மெடிகல்ஹால் பழனி. S. I

நீங்கள் எலக்டிரிக் வயரிங் செய்ய விரும்புகிறீர்களா?

அப்படியானுல் எங்களிடம் ஓர் முறை ஆர்டர் கொடுத்துப் பாருங்கள். குறைந்த கூலியில் உயர்ந்தமுறையில் வேலை செய்து தருவோம். எல்லாவகையான எலக்டிரிக் சாமான்களும் சப்ளை செய்யப்படும்.

T. R. ரெங்கசாமி
பள்ளத்தூர்.

Printed & Published by S. RM. RamanathaMudaliar,
at Vedhambal Press, Pallatur. (Ramnad Dt.)